விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 04 புதன்கிழமை (19.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 365

## பறிபோனது சம்பந்தனின் பதவி

# எதிர்க்கட்சி மகிந்த வசம்

## பாராளுமன்றத்தில் சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு) எதிர்க்கட்சித் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஏற்றுக்கொள்வதாக சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார். நேற்று செவ்வாய்க்கிழமை கூடிய பாராளுமன்ற அமர்வுகளின் போதே சபாநாயகர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். (24-ம் பக்.)



## நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க ஜே.வி.பி பிரேரணை

## ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க மக்கள் விடுதலை முன்னணியினரால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்றுள்ளது.

அத்தோடு குறித்த பிரேரணைக்கு பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தவகையில் நிறைவேற்று ஜனாதிபதி பதவியை இரத்து செய்ய வேண்டும் என்றால் பாராளுமன்றில் பெரும்பான்மையை பெற ஐ.தே.மு, ஜே.வி.பி மற்றும் கூட்டமைப்பு உட்பட மேலும் 24 உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

### வடமராட்சி பகுதியில் முதியவர் கடத்தல்

## கடத்திய நால்வர் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு, கோவில் பகுதியில் முதியவர் ஒருவரை கடத்திய இராணுவ சிப்பாய்கள் உட்பட 7 பேர் பொதுமக்களால் மடக்கப்பட்டபோது 3 பேர் தப்பி சென்றுள்ள நிலையில் 4 பேர் சிக்கிக் கொண்டனர். அவர்கள் நால்வரும் நையப்புடைக்கப்பட்ட பின்னர் பளைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 23

### பிரச்சினைகளை மறந்து

## ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

### ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

பிரச்சினைகளை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து எதிர்க்கட்சியாக செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார். 24

**19-வது அகவை நிறைவு**

அன்பு வாசகர்களே!
உங்கள் வலம்புரிக்கு நாளை
20-ம் திகதி அகவை
19 நிறைவு. இருபதாவது
அகவையில் காலடி வைக்கும்
வலம்புரிக்கு உங்கள் ஆசியையும்
ஆதரவையும் என்றும் வேண்டி
நிற்கின்றோம்.
**- வலம்புரிக் குடும்பம்**

## புதிய அமைச்சரவை பதவியேற்பு இன்று நடைபெறலாம்!

(கொழும்பு)

புதிய அமைச்சரவை பெரும்பாலும் இன்றைய தினம் சத்தியபிரமாணம் செய்து கொள்ளும் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதற்கமைய, அமைச்சர்களின் விபரங்கள் குறித்த பட்டியல் நேற்றைய தினம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் 24

## அனைத்து இன மக்களும் ஏற்கக்கூடிய

# அரசியல் தீர்வொன்றை வழங்கியே தீருவேன்

## பாராளுமன்றில் ரணில் விசேட உரை

(கொழும்பு) அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்றை வழங்கியே தீருவேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் தெரிவித்துள்ளார். மேலும் புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதன் ஊடாக ஒருமித்த நாட்டில் அனைத்து இன மக்களும் ஒன்றாக வாழ்வதற்கு வழியமைப்போம் எனவும் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)



## அரசியலமைப்பை கொண்டுவர இடமளிக்கப் போவதில்லை

### ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தெரிவிப்பு

புதிய அரசியலமைப்பொன்றை கொண்டு வர ஒருபோதும் இடமளிக்க போவதில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இதனை தெரிவித்துள்ளார்.

19-வது அரசியலமைப்பில் பாதிப்பை ஏற்படுத்தும் சரத்துக்களை மாற்றி 20-வது அரசியலமைப்பில் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமாயின் அதற்கு ஆதரவு வழங்க தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

### அமைச்சுப் பதவி பெறுவோரின்

## கல்வித் தகைமையை வெளிப்படுத்த வேண்டும்

### பப்ரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

புதிய அமைச்சரவை 30 உறுப்பினர்களுக்கு மட்டுப்பட வேண்டும் என்பதுடன், அவர்களின் அமைச்சு பொறுப்புக்களுடன் கல்வித் தகைமைகளையும் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ள பப்ரல் அமைப்பு, அமைச்சரவை தெரிவில் பின்பற்ற வேண்டிய 6 விடயங்களை ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ளது. 24

# நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்தும் முறை தவறு

## உதய கம்மன்பில சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரத்தில் பிரச்சினையில்லை என்றும் அதனை செயற்படுத்திய முறையிலேயே பிரச்சினை காணப்படுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கவேண்டுமென கோரி மக்கள் விடுதலை முன்னணி முன்வைத்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "நிறைவேற்று ஜனாதிபதி முறையை சரியாக திருத்தியமைத்து செயற்படுத்த வேண்டும். அமெரிக்க செனட் சபையில் அந்நாட்டு ஜனாதிபதி பொறுப்புக்கூற வேண்டும். அவரை நீதிமன்றிலும் முன்னிலைப்படுத்தலாம்.

ஆனால், எமது நாட்டில் ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறுவதில்லை. அப்படி பொறுப்புக்கூற வேண்டுமாயின் தர்க்கரீதியான செயற்பாடுகளை முன்வைப்பார். எமது நாட்டு நிறைவேற்று அதிகாரத்தில் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் உள்ளன. 78ஆம் ஆண்டு அரசியலமைப்பினால் பிரச்சினைகள் உள்ளன.

அதனை மாற்றியமைத்து செயற்படுத்த வேண்டும். அது தேசிய கடமை" எனத் தெரிவித்தார். (ம-3)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு தரிய நபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-4747)

### கிழவன்காடு கலாமன்றம்

நடத்தும்

### தெய்வீகக் கலையரங்கு





இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் : 19.12.2018 புதன்கிழமை
நேரம் : மாலை 5.00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

- வேதபாராயணம் : தென்னிந்திய மற்றும் ஈழத்து வேதவிற்பன்னர்கள்
- திருவாசக ஓதல் : "திருவாசகக் குயில்" காரை லீலாவதி இராசரத்தினம் (கலாமன்ற பண்ணிசை ஆசிரியர்)
- சொற்பொழிவு : "நாடகப்பாவை" தமிழருவி காரை த.சிவகுமாரன்
- கலாநிதி ஸ்ரீமதி கிருஷாந்தி ரவீந்திரா அவர்களின் நெறியாள்கையில் "சிவானந்த தரிசனம்" நாட்டிய அர்ப்பணம்.
- நாதஸ்வர இளவரசு K.P.குமரன் குழுவினர் வழங்கும் "நாத சங்கமம்"

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*- கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.*

(C-4767)

குறிப்பு: நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை யாழ். கிளையிலிருந்து (இல.428, K.K.S வீதி, யாழ்ப்பாணம்) பிற்பகல் 4.15 மணிக்கு ஆரம்பமாகும். (யாழ். வண்ணை சிவன் கோவில் அருகாமையில்)

### கண்ணீர் அஞ்சலி

மலர்வு 26 09 1960



உதிர்வு 17 12 2018

எமது நிறுவனப் பணியாளர் மதுர்சன் அவர்களின் அன்புத்தந்தை

### அமரர் திரு. கந்தையா கேதீஸ்வரன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி. ஓம் சாந்தி.. ஓம் சாந்தி...*

**பணிப்பாளரும் பணியாளர்களும் கரிகணன் (தனியார்) நிறுவனத்தினர்**

# அரசியல் நெருக்கடிக்கு தீர்வு இலங்கைக்கு சீனா பாராட்டு

இலங்கையில் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்பநிலையை சுமுகமாக கையாளப்பட்டமையை வரவேற்பதாக இலங்கைக்கான சீன தூதுவராலயத்தின் அரசியல் பிரிவின் பேச்சாளர் லூவ் சொங் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் அவர் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, "அரசியல் குழப்பத்தினை சுமூகமான முறையில் தீர்த்துக் கொண்டமைக்காக சம்பந்தப்பட்ட கட்சிகள் அனைத்துக்கும் பாராட்டுக்களை தெரிவித்ததுடன், இலங்கை அரசாங்கம், இலங்கை மக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் என்று அனைத்து தரப்பினரும் உள்விவகாரங்களை கையாளக் கூடிய திறனைகொண்டிருப்பதாக சீனா நம்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சீனாவிற்கும் இலங்கைக்குமான உறவுகளும் ஒத்துழைப்புக்களும் இரண்டு நாட்டு மக்களும் பயனடையும் வகையில் தொடரும் என்றும் தெரிவித்துள்ளார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

### பாராட்டி வாழ்த்துகின்றோம்




வட மாகாணக் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட நல்லாசிரியர் விருது - 2018 விழாவில் சிறந்த ஆசிரியராக மேற்கொண்ட பெறுமதிமிக்க சேவையினைக் கௌரவிக்கும் வகையில் குரு பிரதீபா பிரபா விருதினை 14.12.2018 அன்று பெற்றுக் கொண்ட எமது சங்கீத ஆசிரியையும் யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை மற்றும் முன்னாள் யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியின் ஆசிரியையுமான

### செல்வி சந்திரிக்கா கணேஸ்பரன்

**(இசைக்கலைமணி, சங்கீத கலாவித்தகர், பண்ணிசைக் கலாவித்தகர்)**

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் அவரது சேவை தொடர வேண்டுமென இறைவனை இறைஞ்சுகின்றோம்.

வாழ்த்துபவர்கள்: திருமதி ஹிமாலினி சுகந்தன்
திருமதி கீதாஞ்சலி சாழீபன்

(C-4762)

RAVEENS EMC
KARAVEDDY
வடமராட்சியில்
G.C.E A - LEVEL BIO & MATHS 2019
ENGLISH MEDIUM
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
ஆரம்பம்: 22 - 12 - 2018 (சனிக்கிழமை)
8:30 - 9:30 Bio/Maths | 9:30 - 10:30 Chemistry
- யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைப்பு
- பல்கலைக்கழக கல்வி (Tertiary) ஆங்கிலத்தில் மட்டுமே
- காலம்தான் வெற்றியை தீர்மானிக்கும்
பதிவுகளை மேற்கொள்ளலாம்
100% RESULTS GUARANTEED!
P. Easwaranathan (B.Sc (Hons)(Agric),Dip.in.Edu) Director
021 226 3321

# அமைச்சுப் பொறுப்பினை ஏற்காதிருக்க மனோ, றிசாட், மலிக் தீர்மானம்

ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தலைவர்களான மனோ கணேசன், றிசாட் பதியூதீன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மலிக் சமரவிக்ரம ஆகியோர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பொறுப்புக்களை ஏற்காதிருக்க தீர்மானித்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நேற்று ஆளுங்கட்சியின கூட்டம் இடம்பெற்றது.

இந்த கூட்டத்தின போது தாங்கள் இந்த விடயத்தை பிரதமரிடம் தெரிவித்ததாக முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

19வது அரசியலமைப்புக்கமைய அமைச்சரவை 30 பேருக்குள் உட்பட்டிருக்க வேண்டும்.

இந்தநிலையில், தனனிச்சையாக முனவந்து அமைச்சரவை அந்தஸ்துள்ள பொறுப்புக்களை ஏற்காதிருக்கஎவரேனும்முன் வருமாறு பிரதமர் முன்னாள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களை கோரியுள்ளார்.(ம-3)

### 31ம் நாளில் துயர் பகிர்கின்றோம்



திருமதி

### தியாகராசா தவமணிதேவி

தோற்றம்:27.12.1950 மறைவு:19.11.2018

எமது கல்லூரியின் சக ஆசிரியையான திருமதி உமா ராஜமதன் அவர்களின் அன்புத் தாயாரான அமரர் தியாகராசா தவமணிதேவி அவர்கள் இறைபதம் அடைந்த 31ம் நாளான இன்று அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**ஆசிரியர் கழகம்**
**யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை.**

(C-4764)

# 20 ஆண்டுகளுக்கு நிலையான ஆட்சி

## மனோ கணேசன் சூளுரை

(கொழும்பு)

நிலையான ஆட்சியை அமைப்பதன் மூலம் எதிர்வரும் 20 ஆண்டுகளுக்கு தமது அரசாங்கத்தை "தக்க வைத்துக்கொள்வோம் என தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் சூளுரைத்துள்ளார்.

கொழும்பு - மோதரை கோயிலில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர், புதிய பிரதமரின் பதவியேற்பு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், "ஜனநாயகம் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக அராஜகத்தையும் அநீதியையும் எதிர்த்து நாம் பல போராட்டங்களை முன்னெடுத்தோம். ஜனாதிபதியுடன் போராட்டம் செய்தோம், நீதிமன்றங்களில் நீதிக்காக போராடினோம், தெருக்களில் போராட்டம் செய்தோம், எழுச்சிக் கூட்டங்களை நடத்தி மக்களை ஜனநாயக ரீதியில் அழைத்துச் சென்றோம். இன்று இறுதியாக எமக்கு வெற்றி கிடைத்துள்ளது.

புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றது எமது அரசாங்கத்திற்கு கிடைத்த வெற்றியல்ல. அது ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றியாகும். அத்தோடு விரைவில் நிலையானதொரு ஆட்சியை அமைக்க நாம் திட்டமிட்டுள்ளோம்.

நிலையான ஆட்சியை அமைப்பதன் மூலம் இடம்பெறவுள்ள நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றிபெற்று, தொடர்ந்தும் 20 வருடங்களுக்கு எமது அரசாங்கத்தை தக்க வைத்துக்கொள்வோம்" என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

மேலும் ஐக்கிய தேசிய முன்னணிக்குள்ளேயே இடம்பெற்று வந்த முரண்பாடுகளை தீர்த்துவைத்தமைக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

அத்தோடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்ந்த உறுப்பினர்களை தம்மோடு இணைந்துகொள்ளுமாறும் தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் அழைப்பு விடுத்துள்ளார். (இ-7)

# அரசில் இணைய சு.க. எம்.பிக்களுக்குத் தடை

## ஜனாதிபதி அதிரடி உத்தரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற்கு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, அந்தக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தடைவிதித்துள்ளார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21 பேரும், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துடன்இணைந்துகொள்ள விருப்பம் வெளியிட்டிருந்தனர்.

இது தொடர்பான பேச்சுக்களும் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்று முன்தினம் மாலை சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21 பேரையும் சந்தித்துப் பேசினார்.

இந்தக் கூட்டத்திலேயே அவர், சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 21 பேரும் எதிர்க்கட்சி வரிசையிலேயே அமர வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்புக்குப் பின்னர் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்கட்சி வரிசையிலேயே இருக்கும், ஐ.தே.கவுடன் தேசிய அரசாங்கத்தை அமைக்கமாட்டோம்.

தனித்தனி முடிவுகளை எடுக்காமல் 21 உறுப்பினர்களையும் எதிர்க்கட்சியில் ஒரே குழுவாக இயங்குமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.


இக் கூட்டத்தில், கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்கவும் கலந்து கொண்டிருந்தார். அவரும் இந்த முடிவுக்கு ஆதரவு அளிப்பார் என்று எதிர்பார்ப்பதாக" தெரிவித்தார்.

அதேவேளை அமைச்சர் பதவிகளை ஏற்றுக் கொள்ளாமல், எதிர்க்கட்சி வரிசையில் அமர முடிவு செய்திருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் நிசாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார்.

பியசேன கமகே, ஏ.எச்.எம்.பௌசி, மனுஷ நாணயக்கார தவிர்ந்த சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எவரும் ஐ.தே.க. அரசாங்கத்தில் இணையமாட்டார்கள் என்று சந்திம வீரக்கொடியும் தெரிவித்தார்.

முன்னதாக சுதந்திரக் கட்சியிலுள்ள எவரேனும் விரும்பினால் ஐ.தே.க. அரசாங்கத்தில் இணைந்து கொள்ளலாம் என்றும் அதற்கு தான் தடை விதிக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதியின் வாள் அரசாங்கத்தை நோக்கியே இருக்கப் போகின்றது-வாசு



(கொழும்பு)

ஜனாதிபதியின் வாள் அரசாங்கத்தை நோக்கியே இருக்கப்போகின்றது. அதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நினைத்த பிரகாரம் ஆட்சிசெய்ய முடியாது என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சிக்கு மீண்டும் அதிகாரத்தை வழங்கினாலும் கடந்த காலங்கள் போல் அவர்களுக்கு சுதந்திரமாக செயற்படமுடியாது. அரசாங்கத்தின் பிழையான நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி எதிராக இருக்கும்போது எதிர்க் கட்சியிலிருந்து கொண்டு நாங்களும் கடும் போராட்டங்களை மேற்கொள்வோம்.

அத்துடன் அரசியல் ரீதியில் ஜனாதிபதி நிர்க்கதியான நிலைக்கு ஆளாகக் கூடாது என்பதற்காகவே மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தார். எனவே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி செய்தாலும் ஜனாதிபதியின் வாள் அரசாங்கத்தை நோக்கியே இருக்கப் போகின்றது. அதனால் ஐக்கிய தேசியக் கட்சி நினைத்த பிரகாரம் செயற்பட ஜனாதிபதி இடமளிக்க மாட்டார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ராஜிதவுக்கு எதிராக போர்க்கொடி

(கொழும்பு)

புதிய அமைச்சரவையில் சுகாதார அமைச்சர் பதவிக்கு ராஜித சேனாரட்ன பொருத்தமற்றவர் எனவும் அதற்கான காரணங்களை உள்ளடக்கி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அதன் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு எதிர்ப்பு வெளியிட்டனர். (இ-7)

# இனவாதமற்ற ஒன்றிணைந்த அரசை அமைக்கவே த.தே.கூ.ஆதரவளித்தது

## சரத் பொன்சேகா விளக்கம்

(கொழும்பு)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமக்கு ஆதரவு வழங்கியதற்காக அவர்களை பிரிவினைவாதிகள் என விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர். இனவாதமின்றிய ஒன்றிணைந்த அரசாங்கத்தை அமைப்பதற்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு ஆதரவளித்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலிமுகத் திடலில் ஏற்பாடு செய்யப்பட்ட ஜனநாயகத்திற்கான வெற்றிக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சதித்திட்டத்தின் மூலம் மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகாக்களும் ஆட்சியைக் கைப்பற்றி நன்மையடைய முயற்சித்தனர்.

ஆனால் அது தோல்வியில் முடிவடைந்தது. தனது ஆட்சிக்காலம் முழுவதும் மகிந்த ராஜபக்ஷ சர்வாதிகாரியாகவே செயற்பட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமக்கு ஆதரவு வழங்கியதற்காக அவர்களை பிரிவினைவாதிகள் என விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர்.

இனவாதமின்றிய ஒன்றிணைந்த அரசாங்கத்தை அமைப்பதற்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு ஆதரவளித்துள்ளது.

தற்போது மத்திய வங்கி பிணைமுறி குறித்து பேசும் அவர்கள் அவன்கார்ட், மத்தள விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் என பல்வேறு வழிகளிலும் பல கோடி ரூபாய் கொள்ளையடித்துள்ளனர்.

உலகில் பணக்காரர்கள் பட்டியலிலும் மகிந்த ராஜபக்ஷ இடம்பிடித்துள்ளார். இவற்றை யாராலும் மறந்துவிட முடியாது. நாம் பிழை செய்வதாகக் கூறி எம்மை ஆட்சியிலிருந்து அனுப்பினால் மீண்டும் மகிந்த ராபக்ஷவை ஆட்சியில் அமர்த்த முடியுமா? என நீங்கள் சிந்திக்க வேண்டும். நீதித்துறை, பொலிஸ் என அனைத்தையும் தனது அதிகாரப் பலத்தின் கீழ் கட்டுப்படுத்தி வைத்திருந்த மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சியில் அமர்த்த முடியுமா? என பொன்சேகா கேள்வியெழுப்பினார். (இ-7)

# அதிகாரத்தை கையிலெடுக்க ராஜபக்ஷக்கள் பாரிய சூழ்ச்சி

## நவீன் திஸாநாயக்க குற்றச்சாட்டு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இரகசிய வாக்கெடுப்பை நடத்தாது என்றும் அவ்வாறு இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படுமானால் நாமல் ராஜபக்ஷ தோல்வியடைவாரென, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு- காலிமுகத் திடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷக்கள் அதிகாரத்தை கையிலெடுப்பதற்காக சூழ்ச்சி செய்கின்றனர். நாளையிலிருந்தே போராட்டம் ஆரம்பமாகும். இந் நிலையில் எமக்கிருக்கும் சவால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியல்ல. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் மகிந்த ராஜபக்ஷவுமே எமது சவால் என்று தெரிவித்துள்ளார்.



அத்துடன் எமது கட்சியின் தலைவர் சிறந்த போட்டியாளர். அவருடன் போட்டியிட எவரும் இல்லை என்றும் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 08 - 12 - 1972

உதிர்வு 21 - 11 - 2018



## அமரர் சிவநாதபிள்ளை ரவீந்திரன்

**(ரவி - மெக்கானிக்)**

கடந்த 21.11.2018 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் **சிவநாதபிள்ளை ரவீந்திரன்** (ரவி) அவர்களின் மரணச் செய்தி கேட்டு **வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும்** இருந்து முகநூல், தொலைபேசி, குறுந்தகவல்கள், மின்னஞ்சல், துண்டுப்பிரசுரம், பதாகை வாயிலாகவும் மலர்வளையம், மலர்மாலையிட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வழங்கியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இறுதி அஞ்சலியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 20.12.2018 வியாழக்கிழமை அன்று முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:- தயவுசெய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

(C-6741)

ஆலடி, ஆனைக்கோட்டை.
077 889 3754

*மனைவி திருமதி ரவீந்திரன்*
பிள்ளைகளும் குடும்பத்தினரும்

# மரண அறிவித்தல்



பிறப்பு 08.09.1947

இறப்பு 18.12.2018

## திருமதி யோகேஸ்வரி அப்பையா

"அம்பிகைவாசா" கூவில் புலோலி தென்மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி அப்பையா அவர்கள் நேற்று *(18.12.2018)* செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துள்ளார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-N-4768)

'அம்பிகைவாசா'
கூவில், புலோலி தென்மேற்கு,
புலோலி.

தகவல்:-
குடும்பத்தினர்
021 226 4280, 077 176 8064


# புதிய கிளைகள்...

## சர்வதேச தரத்திற்கு ஏற்றவகையில்

**ஊங்கள் அபிமான வெதுப்பகம் உங்களுக்காக இன்றுமுதல்...**

தினேஷ் வெதுப்பகம்
உங்கள் அபிமான வெதுப்பகம் 1982 ல் இருந்து

**சுன்னாகம், பஸ்ரியன் சந்தி,**
**தின்னவேலி சந்தைக்கு அருகாமையில்**

*அனைவரையும் அன்போடு*
*அழைக்கின்றோம்*

என்றும் ஒரே தரம்...



(6739)

# ஆவா குழுவைச் சேர்ந்த 11 பேர் ஆறு வாள்களுடன் நேற்றுக் கைது

## வானில் பயணித்த போது பொலிஸாரிடம் மாட்டினர்

(யாழ்ப்பாணம்)

**ஆவாகுழுவைச் சேர்ந்த 11 பேரைக் கைது செய்துள்ளதுடன், அவர்களிடமிருந்து வான், ஆறு வாள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையிலான பொலிஸ் குழுவினரே நேற்று அதிகாலை 3 மணியளவில் மானிப்பாய் பிரதேசத்தில் வைத்து இவர்களைக் கைதுசெய்துள்ளனர்.**

ஆவா குழுவின் முக்கிய ஸ்தர்களான போல் விக்டர் மற்றும் அஞ்சித் ஆகியோருடன், ஏனைய 9 இளைஞர்களும் ஆவா குழுவுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 11 பேரும் 22 வயது முதல் 24 வயதுடையவர்கள் என்றும், இவர்கள் மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசம் ஒன்றில் வான் ஒன்றில், 6 வாள்களுடன் பயணித்த போதே, வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 11 இளைஞர்களும்சுன்னாகம்பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விசாரணைகளின் பின்னர் 11 பேரையும் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-101)

## ஓநாய்களுடன் இணைந்து பயணத்தை தொடர முடியாது

### விஜித் விஜயமுனி கடும் தாக்கு



(கொழும்பு)

நான் சுதந்திரக் கட்சியின் மூலம் நாடாளுமன்றத்திற்கு வந்தவன் என்ற போதிலும், இனியும் இந்த ஓநாய்களுடன் இணைந்து அரசியல் பயணத்தை தொடர முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் கூடியது. இதன்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான விஜித் விஜயமுனி ஆளுந்தரப்பில் சென்று அமர்ந்து கொண்டார். இதனை தொடர்ந்து நாடாளுமன்றில் அவர் ஆற்றிய உரையின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "நான் சுதந்திரக் கட்சியின் மூலம் நாடாளுமன்றத்திற்கு வந்தவன். ஆனால் இன்று கட்சியிலிருப்பவர்கள் கட்சியை பற்றி சிந்திக்காமல் செயற்படுகின்றனர். இடையில் வந்தவர்கள் கட்சியை பிளவுபடுத்த முயற்சிக்கின்றனர்.

பல முக்கிய சந்தர்ப்பங்களில் உயிரை பணயம்வைத்து கட்சிக்காகப் பாடுபட்டோம். ஆனால், தற்போது கீரியும் பாம்பும் ஒரே மேடையில் ஏறும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்று சுதந்திரக் கட்சி முன்னோக்கியும் செல்ல முடியாமல் பின்னோக்கியும் செல்ல முடியாமல் உள்ளது.

மைத்திரி எனக்கு அமைச்சுப் பதவியை கொடுத்தார். அவருக்கு நன்றி. ஆனால், ஓநாய்களுடன் இணைந்து இந்த பயணத்தை முன்னெடுக்க முடியாது" எனத் தெரிவித்தார். (இ-7)

## மரண அறிவித்தல்

### திரு.பொன்னையா தம்பிஐயா (சின்னவர்)

அன்னை மடியில்
11 - 10 - 1942



ஆண்டவன் அடியில்
17 - 12 - 2018

கரணவாய் காவில் வயலைப் பிறப்பிடமாகவும் கரணவாய் தூதாவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.பொன்னையா தம்பிஐயா அவர்கள் 17.12.2018 திங்கட்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா சிவபாக்கியம் தம்பதியினரின் பாசமிகு மருமகனும், தங்கராசா (பெரியவர்), மகேஸ்வரி (கனடா), புவனேஸ்வரி, சிவப்பிரகாசம் (கோட்டக்கல்விப் பணிப்பாளர் -ஓய்வுநிலை), இலட்சுமி (இந்தியா), நவரத்தினசாமி (கனடா), பரமேஸ்வரி (அமரர்), பத்மநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஸ்ரீஸ்கந்தராசா, ரதீஸ்வரி (சுவிஸ்), ரமணீஸ்வரி, ஸ்ரீகாந்தன் (அமரர்) ஆகியோரின் அன்புமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 20.12.2018 வியாழக்கிழமையன்று அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் வெல்லன்கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

(C-4758)

தூதாவளை
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

**077 907 8068**

## இராசி பலன்

**மீனம்:** குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

**மேடம்:** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும் நாள், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், ஆரோக்கியத்தில் அக்கறை கூடும்.

**இடபம்:** வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயனக்குறைவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**கும்பம்:** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| செவ் | சந் | | |
| | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் | | ராகு |
| கேது | | | |
| சனி, சூரி | குரு, புத | சுக் | |

**19.12.2018**

மார்கழி 04, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு

துவாதசி பின்னிரவு 4.21 மணிவரை

பரணி பின்னிரவு 2.34 மணிவரை

சுபநேரம் 4.53-6.23 மணிவரை

இராகுகாலம் 12.23-1.53 மணிவரை

சித்தாமிர்தம்

வளவன்

**கடகம்:** எடுத்த காரியங்கள் எளிதில் ஈடேறும் நாள், நண்பர்கள் மத்தியில் பாராட்டும், புகழும் கூடும் நாள், பயணத்தால் பலனுண்டு, போசன நன்மையுண்டு, தலைமைப்பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

**மகரம்:** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், பெற்றோா நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வியாபார விருத்தியுண்டு, ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**தனுசு:** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உடன்பிறப்புக்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர்.

**துலாம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, பொது நலனில் ஆர்வம் கூடும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

# மக்கள் பார்வைக்கு வரவு-செலவுத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட வரைபு மக்கள் பார்வைக்காக நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரையில் வைக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்தார்.

நிலைத்தகு அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு பிரதேச உட்கட்டமைப்பு அபிவிருத்தி, சிறார் நலன்கள், பெண்களின் முன்னேற்றம், வறுமை ஒழிப்பு, விசேட தேவையுள்ளவர்களுக்கான திட்டங்கள், பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், சுகாதார மேம்பாடு, சுற் றுச் சூழல் பாதுகாப்பு, கலை கலாசார விளையாட்டுத்துறை மேம்பாடு எனப்பல திட்டங்களையும் உள்ளடக்கியதாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் வரவு- செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ் வரவு-செலவுத்திட்டம் பற்றி மேலும் கருத்துரைத்த தவிசாளர், இவ் வரவு-செலவுத்திட்ட தயாரிப்பிற்கு ஏற்கனவே தாம் கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினர்களின் கருத்துக்கள் ஆலோசனைகளை சபையிலும் குழுக்களிலும் உள்வாங்கியே தயாரித்துள்ளோம்.

புதிதாக சபை அமைந்ததன் பின்னர் எமது நடவடிக்கைகளை திறன்பட ஆற்றிச் செல்வதற்காக துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளை உள்வாங்கியே திட்டங்களை வகுத்து வருகின்றோம்.

இதில் ஒரு நடவடிக்கையாக அமையப்பெற்ற சபையின் முதலாவது வரவு-செலவுத்திட்டம் என்ற வகையில், புத்திஜீவிகள், கிராமிய பொருளாதார மேம்பாட்டுச் செயற்பாட்டாளர்கள் பிரஜைகள் என சகல தரப்பினரின் ஆலோசனைகளையும் உள்வாங்கி பலதரப்பட்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டு மக்களுக்குப் பயனளிக்கத்தக்க வகையில் வரைபைப் பூர்த்தி செய்துள்ளதாக தி.நிரோஷ் தெரிவித்தார்.

1987ஆம்ஆண்டின்15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் அத்தியாயத்தின் பிரிவு 14 (3) இன் பிரகாரம் பொதுமக்கள் கவனத்திற்காக பிரதேச சபைகள் தமது வரவு-செலவுத் திட்டத்தினை பொது இடங்களில் காட்சிப்படுத்த வேண்டும்.

இதனடிப்படையிலேயே வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களான புத்தூர், அச்சுவேலி, கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய் ஆகிய உப அலுவலகங்கள், பொதுநூலகங்களில் வரவு-செலவுத்திட்டம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# வடக்கு மின்சார சபை வெற்றிடங்களுக்கு பெரும்பான்மை இனத்தவர்கள் நியமனம்

## தமிழ் மக்கள் கூட்டணி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மின்சாரசபை வெற்றிடங்களுக்கு பெரும்பான்மை இனத்தவர்கள் நியமிக்கப்பட்டமையை தமிழ் மக்கள் கூட்டணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

அண்மையில் வடக்கு மின்சார சபைக்கு 46 சிங்கள இளைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுவும் தமிழ் மக்கள் மீதான ஒரு வகையான ஆக்கிரமிப்பாகவே கருதப்பட வேண்டும்.

தமிழ்ப் பிரதேசத்தில் எத்தனையோ ஆயிரம் இளைஞர்கள் வேலையின்றி துன்பப்படும்போது அவர்களுக்கு நியமனம் வழங்காது சிங்கள மாவட்டம் ஒன்றிலிருந்து வடக்குக்கு நியமிக்கப்பட்டதை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது. ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

இதனை உடனடியாக இரத்துச் செய்து அவ்விடங்களுக்கு வடக்கிலுள்ள தகுதியான தமிழ் இளைஞர்கள் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும்.

அத்துடன் ஏற்கனவே மின்சார சபையில் பணியாற்றிய வறிய குடும்பத்தின் தகுதியானவர்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவ்விடயங்களை உரிய தரப்புக்களின் கவனத்துக்கு எமது கட்சி கொண்டு செல்லும் என்பதுடன் இதற்கு எதிராக ஒருமித்து குரல் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.அருந்தவபாலன் தெரிவித்துள்ளார். (இ-7)

# பரு. பிரதேச சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சபை தவிசாளர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக த.தே. கூட்டமைப்பை சேர்ந்த 8 பேரும், த.தே.ம.முவைச் சேர்ந்த 4 பேரும், ஈ.பி.டி.பியை சேர்ந்த 3 பேரும், த.வி.கூட்டணியைச் சேர்ந்த ஒருவரும், பொது ஜன பெரமுனவைச் சேர்ந்த ஒருவருமாக 17 பேர் ஆதரவளித்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த இருவர் எதிர்ப்பு தெரிவிக்க த.வி.கூட்டணியைச் சேர்ந்த ஒருவரும், ஐ.தே.கட்சியைச்சேர்ந்த ஒருவருமாக இருவர் நடுநிலைமை வகிக்க பருத்தித்துறை பிரதேசசபை வரவு-செலவுத் திட்டம் நிறைவேறியது. (இ-60)

# வேலைவாய்ப்பு கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில், போலி முகவர்களின் மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலும், அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புமுகவர்சேவை நிறுவனம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நாளை 20 ஆம் திகதி வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

சிகரம் நிறுவனம் 10 ஆவது ஆண்டில்காலடிஎடுத்து வைப்பதையொட்டியே, அந்த நிறுவனத்தின் இணை நிறுவனமாக அரச அங்கீகாரத்துடன் இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம், இலக்கம் 221, 1/1, மின்சார நிலைய வீதி என்ற முகவரியில் நாளை 20 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

இதில்வெளிநாட்டுவேலைவாய்ப்பு முகவர் சேவை தொடர்பாகவும் கிடைப்பனவாகவிருக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் தொடர்பாகவும் வடக்கு மாகாண மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள உதவும் வகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில்வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் தொடர்பான கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

எதிர்வரும் 20, 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் மேற்படி முகவரியில் அமைந்துள்ள சிகரம் நிறுவனத்தின் விரிவுரை மண்டபத்திலும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலும் 2019 ஜனவரி 4 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலும் அடுத்தநாள் 5 ஆம் திகதி துணுக்காய் பிரதேச செயலகத்திலும் இந்தக் கண்காட்சி நடத்தப்படவுள்ளன. (இ-7)



நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் உதவும் கரங்கள் அமைப்பால் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவி தி.தர்சாவின் (A/L கணிதப் பிரிவு 2019) குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு துவிச்சக்கரவண்டி வழங்கியபோது...

# பட்ஜெட் இறுதி வாக்கெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்ட இறுதி அங்கீகார வாக்கெடுப்பு நாளை வியாழக்கிழமை பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறும். (இ)




# வயல்களுக்குள் நுழையும் கால்நடைகளால் வரணிப்பகுதி விவசாயிகள் கவலை



(பொற்பதி)

வெற்றிலைக்கேணிப் பகுதியில் இம்முறை அதிகளவிலானோர் நெற்செய்கையில் ஈடுபட்டுவரும் நிலையில் கால்நடைகளின் தொல்லையால் தமது பயிர்ச்செய்கை பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் வெற்றிலைக்கேணியை அண்டிய பல பகுதிகளில் இம்முறை நெற்செய்கையில் ஈடுபட்டு வரும் நிலையில் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளை கட்டிப் பராமரிக்குமாறும் குறித்த விடயம் தொடர்பில் வெற்றிலைக்கேணி விவசாய சம்மேளன அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-64)



யாழ்.ஏழாலை தெற்கு தமிழ்ப்பொதுப்பணி மன்றத்தின் சனசமூக நிலையத்திற்கான புதிய கட்டடம் நேற்றுக்காலை திறந்துவைக்கப்பட்டது. தமிழ்ப்பொதுப்பணி மன்ற தலைவர் சுயாதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மற்றும் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் இணைந்து புதிய கட்டடத்தை திறந்து வைத்தனர். பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனால் ஒதுக்கப்பட்ட சுமார் 1.5 மில்லியன் நிதி மற்றும் கிராம உட்கட்டமைப்புக்கான அரசினால் ஒதுக்கப்பட்ட 5 இலட்சம் என மொத்தம் சுமார் 2 மில்லியன் செலவில் சனசமூக நிலையத்திற்கான புதிய மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திறப்பு விழாவில் கிராம உத்தியோகத்தர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம மக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-கிஷோர்)

# பலநோக்கு மண்டபத் திறப்பு

(கரணவாய்)

மயிலிட்டி வடக்கு பலநோக்கு மண்டபத் திறப்புவிழா நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு மயிலிட்டி கிராம அபிவிருத்தி அமைப்பின் தலைவர் ஐ.உருத்திரமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ மற்றும் வலி.வடக்கு பிரதேசசபை தவிசாளர் எஸ்.சுகிர்தன், கௌரவ விருந்தின்ர்களாக யு.என்.டி.பி. பிராந்திய திட்ட இணைப்பாளர் த.தனக்குமார் மற்றும் யு.என்.டி.பி.வெளிக்கள திட்ட நிபுணர் இ.சர்வானந்தா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-60)

# சனசமூக நிலைய கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வேலணை பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலைய கௌரவிப்பு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பள்ளம்புலம் முருகமூர்த்தி கோவில் நால்வர் மணி மண்டபத்தில் நிலையத் தலைவர் சொ.சிவயோகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் 2018 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் விசேட சித்தியடைந்த மாணவி முகிலன் தஷானா கௌரவிக்கப்பட்டவுள்ளார். (இ-5)

# பொலிஸ், ஊடகத்துறையை வசப்படுத்த மைத்திரி முயற்சி

## ஐ.தே.க.கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

சட்டம் ஒழுங்கு அமைச்சையும் ஊடகத்துறை அமைச்சையும் ஐ.தே.கவுக்கு விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இறுக்கமான நிலைப்பாட்டில் இருப்பதால், புதிய அமைச்சரவை நியமனத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டு இரண்டு நாட்களாகியும் புதிய அமைச்சரவை இன்னமும் நியமிக்கப்படவில்லை.

புதிய அமைச்சர்களின் நியமனம் தொடர்பாக, ஜனாதிபதி முட்டுக்கட்டை போடுவதால், சிக்கல் ஏற்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் இருந்த பொலிஸ் திணைக்களத்தை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த ஒக்டோபர் மாதம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்திருந்தார்.

இந் நிலையில் ஐ.தே.க. அரசாங்கத்திடம் சட்டம் ஒழுங்கு அமைச்சை விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி விடாப்பிடியாக உள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டுக்கு ஐ.தே.க. எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களம் மீண்டும் சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள ஐ.தே.க. அந்த அமைச்சுப் பதவி தமது கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது,

அதுபோன்றே, ஊடகத்துறை அமைச்சும் தனது வசமே இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சை விட்டுக் கொடுத்தாலும் கூட, இரண்டு அரச ஊடக நிறுவனங்கள் தனது நேரடி கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என் பதில் அவர் உறுதியாகவுள்ளார்.

இதற்கும் ஐ.தே.க. எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அனைத்து ஊடக நிறுவனங்களும் ஊடகத்துறை அமைச்சின் கீழேயே இருக்க வேண்டும் என்றும், அந்த அமைச்சு ஐ.தே.க. விடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

இதனால் புதிய அமைச்சரவை நியமனத்தில் இழுபறிகள் ஏற்பட்டுள்ளன. (இ-7)

# நாவற்குழியில் பெருமளவு பனை மரங்கள் அழிப்பு
## பனை அபிவிருத்திச்சபை சட்ட நடவடிக்கை





(நாவற்குழி)

நாவற்குழி - கைதடி, பின்முருங்கை வீதி , கடற்கரையோரத்தில் 10 ஏக்கர் பனந்தோப்பில் எந்த விதமான அனுமதியின்றி சுமார் 500 - 600 வரையான பனை மரங்கள் மற்றும் வடலிகள் சட்ட விரோதமாக இரண்டு கனரக வாகனங்கள் (JCB) மூலம் நேற்று முன்தினம் நண்பகல்12.15 மணியளவில் அழிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட இடத்திற்கு சபையின் உத்தியோகத்தர்கள் சென்று பனை அழிப்பினை தடுத்து நிறுத்தியதுடன், அப்பகுதிக்குரிய கிராம உத்தியோகத்தர் மற்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்து அவர்களின் ஒத்துழைப்புடன் இரண்டு வாகனங்களும் மற்றும், இரண்டு சாரதிகளையும் சட்ட நடவடிக்கையின் பொருட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றதுடன், சபையின் உத்தியோகத்தர்களால் இச்சம்பவம் தொடர்பில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டது.

வடமாகாணத்தில் பனை வளமானது அருகி வரும் நிலையில் அபிவிருத்தித் தேவைகளுக்காக பெருமளவில் திட்டமிட்டு அழிக்கப்படுவது சமூக ஆர்வலர்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இனிவருங்காலங்களிலும் இவ்வாறான அழிப்புகள் நடைபெறும்பட்சத்தில் பனை அபிவிருத்திச் சபையானது தொடர்ந்தும் கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்என பனை அபிவிருத்திச் சபை முகாமையாளர் எச்சரித்துள்ளார். (இ-9)

# வீட்டு கூரை பீலிகளில் நுளம்பு பெருக வாய்ப்பு

(சாவகச்சேரி)

வீட்டின் கூரைப் பகுதிகளில் நீர் வடிந்தோடும் பீலிகளில் (குழாய்கள்) அடைப்பு ஏற்பட்டு நீர் தேங்கி நுளம்பு பெருகும் வாய்ப்புகள் அதிகம் காணப்படுவதாக தென்மராட்சி சுகாதார பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

தென்மராட்சி பகுதி மக்கள் தற்போது வீட்டு சூழலில் காணப்படுகின்ற சிரட்டைகள், ரின்கள் மற்றும் ரயர்கள் ஆகியவற்றை அகற்றி பாதுகாப்பாக உள்ள போதிலும் வீட்டுக் கூரைகள் மற்றும் உயரமான மரப் பொந்துகள் ஆகியவற்றை கவனிக்கத் தவறுவதாகவும் சுகாதாரப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது இவ்வாறான சூழலில் தான் நுளம்புப் பெருக்கம் அதிகமாக காணப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் சாவகச்சேரி நகர் பகுதிகளில் கடந்த வருடத்தை விட இவ் வருடம் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகி இருப்போரின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

கடந்த வருடம் சாவகச்சேரி நகர் பகுதியில் டெங்கு பரிசோதனைகள் மற்றும் விழிப்புணர்வுகள் அடிக்கடி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# நேரக்கட்டுப்பாடு தளர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு இன்று 19 ஆம் திகதி முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நேரக்கட்டுப்பாட்டை தளர்த்தியுள்ளதுடன் 23 ஆம் மற்றும் 30 ஆம் திகதிகளில் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் திறக்கப்படுமெனவும் 25 ஆம் திகதி விடுமுறை தினம் எனவும் யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியத்தலைவர் அறிவித்துள்ளார். (இ-5)

# இலங்கை வான்பரப்பில் 220 விமானங்கள்!
## வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வான்பரப்பின் ஊடாக அதிகளவான விமானங்கள் பயணம் மேற்கொண்டதால் வருமானம் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் அதிகளவான விமானங்கள் பறந்துள்ளதாக விமான சேவை அதிகார சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த காலப்பகுதியினுள் 220 விமானங்கள் இலங்கையின் விமான எல்லையின் ஊடாக பயணித்துள்ளதாக தெரியவந்துள்ளது. அதன்மூலம் இலங்கைக்கு 10 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

பேத்தாய் சூறாவளி காரணமாக இந்திய விமான எல்லையின் ஊடாகப் பயணிக்க வேண்டிய விமானங்கள் இலங்கையின் விமான எல்லையினுள் பறந்தமையால் இந்த வருமானம் கிடைத்துள்ளது.

இதற்கு முன்னர் கஜா புயல் காரணமாக 200 விமானங்கள் இலங்கையின் விமான எல்லையின் ஊடாகப் பயணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும்துல்லியமாககணித்துத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-076 835 1932,
021 223 2222
உரும்பிராய்.

(6730)

வேலைவாய்ப்பு (VACANCY)

FULL TIME/PART TIME
WAITER/ROOM BOY

இத்துறையில் முன் அனுபவம் அல்லது படிப்பு உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

விபரம்
SUBHAS TOURIST HOTEL
49, VICTORIA ROAD, JAFFNA
TEL:- 021 222 4923
077 727 8630

(6726)

வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்



திரு.கதிர்காமநாதன் செல்வகுமார்

பூநகரியைப்பிறப்பிடமாகவும் திருவையாறு கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமநாதன் செல்வகுமார் அவர்கள் 12.12.2018 அன்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் அகில இலங்கை சமாதான நீதவானாக பதவிப்பிரமாணம் செய்ததை மனமார வாழ்த்தி நிற்கின்றோம். இவர் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் பழைய மாணவன் என்பதோடு கரைச்சி தெற்கு ப.நோ. கூ.சங்கம், திருவையாறு விவசாய கூ.சங்கம், கிளி/ கால்நடை வளர்ப்போர் கூ.சங்கங்களின் முன்னை நாள் பணியாளர் என்பதுடன் கிளி.கந்தசுவாமி தேவஸ்தானம், விவேகானந்த நகர் முருகன் ஆலயம், வட்டக்கச்சி சிவன் ஆலயம், ஜெயந்திநகர் முத்துமாரியம்மன் ஆலயம் என்பவற்றின் கௌரவ கணக்காய்வாளருமாவார். தற்போது கூட்டுறவு அபிவிருத்தி அலுவலராக முல்லைத்தீவு கூட்டுறவு திணைக்களத்தில் கடமை புரிந்து வரும் இவர் சகல சௌபாக்கியமும் பெற்று வாழ இந்நாளில் மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
பெற்றாரும்
உடன் பிறந்த சகோதரர்களும்

திருவையாறு,
கிளிநொச்சி.

(சி-6737)

# காணாமல் போனோர் அலுவலகப் பிரதிநிதி
# மனிதப்புதைகுழியை நேற்று பார்வையிட்டார்



(மன்னார்)

**மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணியை காணாமல் போனோர் அலுவலகப் பிரதிநிதி மிராக் ரஹீம் தகவல்களைப் பெறுவதற்காக நேற்றைய தினம் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளார்.**

மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியானது 118 ஆவது நாளாக நேற்று செவ்வாய்க்கிழமை சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

தற்போது அகழ்வுப் பணிகள் மற்றும் அப்புறப்படுத்தும் பணிகளுடன் புதைகுழியை சற்று ஆழப்படுத்தும் பணிகளுடன் அகழும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. இதுவரை மன்னார் மனித புதை குழியில் இருந்து 276 இற்கு மேற்பட்ட முழு மனித எச்சங்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றில் 269 க்கு மேல் மனித எச்சங்கள் முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக நேற்றைய தினம் மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியை நேரடியாக பார்வையிடுவதற்காகவும் தகவல்களைப் பெறுவதற்காகவும் காணாமல் போனோர் அலுவலகப் பிரதிநிதி மிராக் ரஹீம் நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதுவரை மீட்கப்பட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த மனித எச்சங்களில் பரிசோதனைக்காக அனுப்பப்பட தகுதியான மனித எச்சங்களைத் தெரிவு செய்யும் பணியும் இடம்பெற இருப்பது குறிப்பிடத்தக்கது. (2-285)




# செல்வபுரம் கடற்கரை பகுதியில் கரையொதுங்கிய புலிக்கொடிகள்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் செல்வபுரம் கடற்கரை பகுதியில் இரண்டு புலிக்கொடிகள் கடல்அலை சீற்றத்தினால் கடலுக்குள் இருந்து கரை ஒதுங்கியுள்ளன.

இந்த புலிக்கொடிகள் நேற்றுக்காலை கரை ஒதுங்கியுள்ளன.

செல்வபுரம் கடற்கரைப் பகுதியில் கடல் சீற்றம் காரணமாக கடலுக்குள் புதையுண்டிருந்த கழிவுப் பொருட்கள் கரையொதுங்கி வருகின்றன. இதன்போது காலணிகள், உடைகள், இரும்புகள், உரபைகள், என பல பொருட்கள் கரையொதுங்கி வருவதுடன் கடல் அட்டைகளும் கரை ஒதுங்கி வருகின்றன.

இந்நிலையில் பிரதேச மீனவர்கள் கடல் அட்டைகளை பொறுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதன்போது கடல் அலைக்குள் இருந்து ஒரு இரண்டு அடி நீளம் கொண்ட புலிக்கொடி ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. இதனை அருகில் இருந்த மீனவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதுடன் தகவல் அறிந்து வந்த படையினர், புலனாய்வாளர்கள் ஆகியோர் அதனை எடுத்து சென்றுள்ளார்கள்.

அதன் பின்னர் காலை 9 மணியளவில் மீனவர்கள் கடல் அட்டை பொறுக்கி கொண்டு இருந்த வேளை நான்கு அடி நீளம் கொண்ட புலிக்கொடி ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

இரண்டு கொடிகளும் புதிய கொடிகளாகவே காணப்பட்டுள்ளன. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த முல்லைத்தீவு பொலிஸார் அந்த கொடிகளை எடுத்து சென்றுள்ளதுடன் படைபுலனாய்வாளர்கள் எடுத்து சென்ற கொடியையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். (2-281)

# சுகாதாரமான சமூகத்தை உருவாக்குவதற்கு தடையாக இருப்போர் மீது சட்ட நடவடிக்கை

## கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் எச்சரிக்கை

(முல்லைத்தீவு)

சுகாதாரமான சமூகத்தை உருவாக்குவதற்குத் தடையாக இருப்போர் மீது கடுமையான சட்ட நடவடிக்கையெடுக்கப்படுமென கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் க.விஜிந்தன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவரது அறிக்கையின்படி,

கரைதுறைப்பற்றுப் பிரதேசசபைக்குட்பட்ட சந்தை வியாபாரிகள், பலசரக்கு வர்த்தகர்கள் மற்றும் உணவகங்களில் பணிபுரிபவர்கள் தமது கடமை நேரத்தில் வெற்றிலை சப்புதல், புகைப்பிடித்தல் செயற்பாடுகள் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதென அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் விதிமுறைகளை மீறிச் செயற்படும் வியாபாரிகள் மற்றும் உரிமையாளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வியாபார உரிமம் இரத்துச் செய்யப்படும் நிலையும் ஏற்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வியாபாரிகள் வியாபார நேரங்களில் வெற்றிலை சப்பி துப்புவதாலும் புகைப் பிடிப்பதாலும் பலத்த சுகாதார சிக்கல்களுக்கு உள்ளாவதாக பொதுமக்கள் தம்மிடம் தெரியப்படுத்தியுள்ளனர்.

எனவே சுகாதாரம் மிக்க சமூகத்தைக் கட்டியெழுப்ப உரிய தரப்பினர் ஒத்துழைப்பு வழங்குமாறு அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# வவுனியா நகரசபை பாதீட்டில் திருநாவற்குளம் புறக்கணிப்பு

## மக்கள் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

வவுனியா நகரசபையின் 2019 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் ஆயிரத்து 452 வாக்காளர்களைக் கொண்ட திருநாவற்குளம் கிராமம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரசபையின் முதலாம் வட்டாரத்திலுள்ள நகரசபை விடுதி, குருமன்காடு, பத்தினியார் மகிழங்குளம், திருநாவற்குளம் ஆகிய கிராமங்களில் அதிக வாக்காளர்களைக் கொண்ட ஒரு கிராமமாக திருநாவற்குளம் உள்ள போதும் நகரசபையின் 2019 ஆம் ஆண்டு பாதீட்டில் இக் கிராம அபிவிருத்திக்கு எந்தவித நிதியும் ஒதுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கிராமத்தில் இருந்து நகரசபையானது வருடாந்தம் சுமார் 1.5 மில்லியன் ரூபாய் நிதியை வருமானமாகப் பெற்றுக் கொள்கின்ற போதும் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

மாறாக வெறும் 07 இலட்சம் ரூபாய் வருமானத்தை கொண்ட எமது கிராமத்திற்கு அயலிலுள்ள பட்டாணிச்சூர் கிராமத்திற்கு 5.5 மில்லியன் ரூபா அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

எமது வட்டார நகரசபை உறுப்பினர்கள் எமது கிராம அபிவிருத்தி தேவை குறித்து வெளிப்படுத்தியிருந்தும் எமது கிராமத்திற்கு என ஒதுக்கிய நிதியை அயல் கிராமத்திற்கு ஒதுக்கிக் கொடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

எனவே, எமது கிராமம் தொடர்பில் நகரசபைத் தலைவர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் திருநாவற்குளம் மக்கள் கோரியுள்ளனர். (2-250)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை சந்தேகநபர்கள் இருவர் தப்பியோட்டம்

## புளியம்பொக்கணைக் காட்டில் சம்பவம்

(பரந்தன்)



கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணைக் காட்டுப் பகுதியில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் சற்றுமுன் கிளிநொச்சி பொலிஸ் விசேட குழுவினரால் முற்றுகையிடப்பட்ட நிலையில் சந்தேக நபர்கள் இருவர் தப்பியோடியுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் விசேட குழுப் பொறுப்பதிகாரி டி.எம் சத்துரங்க தலைமையிலான குழுவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே இந்த முற்றுகை இடம்பெற்றுள்ளது.

இதன்போது இரண்டு சந்தேக நபர்கள் தப்பியோடியுள்ளனர். குறித்த பகுதியில் இருந்து பதின்மூன்று பெரல் கோடா மற்றும் மூன்று கான்களில் கசிப்பு மற்றும் கசிப்பு வடிப்பதற்கான பொருட்களுடன் சந்தேகநபர் ஒருவரின் துவிச்சக்கர வண்டியும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

தப்பிச் சென்ற இரு சந்தேக நபர்களையும் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர். அவர்களை கைது செய்யும் நடவடிக்கையை முன்னெடுத்து வருவதுடன் குறித்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஓர் கசிப்பு மொத்த விற்பனையாளரினது எனவும் சந்தேக நபர்களைக் கைது செய்ததன் பின்னர் பிரதான குற்றவாளியையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் மீட்கப்பட்ட சான்றுப் பொருட்களை இன்றையதினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-312)

# வவுனியாவில் உணவு கையாளும் நிலையங்களில் கடமையாற்றிய ஆறு நோயாளர்கள் கண்டுபிடிப்பு

## சிகிச்சை வழங்கப்பட்டு அனுமதி

(குருமன்காடு)

வவுனியாவில் உணவு கையாளும் நிலையங்களில் கடமையாற்றிய ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் ஆறு பேருக்கு நோய்த்தொற்றை ஏற்படுத்தக் கூடிய நோய்க் காவி காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் க.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 11 சுகாதார பரிசோதகர் பிரிவுகளிலும் காணப்பட்ட உணவகங்களில் கடமையாற்றும் உணவு கையாளும் உழியர்கள் 382 பேருக்கு இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரை மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உணவகங்களில் கடமையாற்ற அனுமதி வழங்கப்பட்டது.

அத்துடன், இம் மருத்துவப் பரிசோதனையில் 3 பேருக்கு நெருப்பு காய்ச்சலை பரப்பக்கூடிய நோய்க்காவி காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதுடன், 3 பேருக்கு காச நோயை ஏற்படுத்தும் நோய் காவி இருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களுக்குரிய மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு, மீண்டும் அதே உணவகங்களில் கடமையாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-250)

# அந்நியப் படைப்புழுவின் தாக்கம்; அளம்பில் பிரதேசத்தில் அதிகரிப்பு

## முல்லை.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் உகநாதன் எச்சரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அந்நியப் படைப்புழுவின் தாக்கம் அளம்பில் பிரதேசத்தில் இனம் காணப்பட்டுள்ளதாக மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.உகநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சோளம், இறுங்கு, மரக்கறி, பழப்பயிர் என்பவற்றை விரைவாக தாக்கக்கூடிய அந்நியப் படைப்புழுவின் தாக்கம் அளம்பில் பிரதேசத்தில் இனம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

விவசாய செய்கையைப் பாதிக்கும் இந்த படைப்புழு நூறு கிலோமீற்றர் வேகத்தில் பறக்கக்கூடிய தன்மையும் இதன் தாக்கம் விரைவாகப் பரவி பயிர்களை அழிக்கக்கூடியது.

இதன் தாக்கம் விவசாயிகளுக்கு பொருளாதார நட்டத்தை ஏற்படுத்தும். அளம்பில் பிரதேசத்தில் 27 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டுள்ள சோளம், இறுங்கு ஆகிய பயிர்களில் இனம் காணப்பட்டுள்ளது.

இது ஏனைய பிரதேசங்களுக்கும் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதால் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் தங்கள் பகுதி விவசாயப் போதனா ஆசிரியருடன் தொடர்பு கொண்டு படைப்புழுத்தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அறிவுரைகளை அவர்களிடம் கேட்டு பின்பற்றுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)

# கைவிடப்பட்ட குளங்களைப் புனரமைத்து விவசாய நிலங்களை பகிர்ந்தளியுங்கள்

## காணிகளற்ற விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பகுதிகளில் மக்களின் வாழ்வாதாரப் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற வகையில் கைவிடப்பட்ட குளங்களைப் புனரமைத்து அதற்குட்பட்ட விவசாய நிலங்களைத் தமக்கு வழங்குமாறுகாணிகளற்ற விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுகாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அனிஞ்சியன்குளம் கிராமத்தில் 60 இற்கும் மேற்பட்ட விவசாயக்குடும்பங்கள் வயல் காணிகளின்றி வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் இந்தப் பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்ற விளாத்திக்குளம் வனவள திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.




ஏற்கனவே பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள இக்குளம் யுத்தகாலத்தில் கைவிடப்பட்டுள்ளதுடன், இதன் கீழான விவசாய நிலங்களும் கைவிடப்பட்டன.

மீள்குடியேற்றத்தின் பின்னர் இக்குளத்தைப் புனரமைத்து இதன் கீழான விவசாய நிலங்களை வழங்குமாறு விவசாயிகள் கோரியுள்ளபோதும் வனவளத் திணைக்களம் குறித்த குளத்தையும் வயல் நிலங்களையும் எல்லையிட்டுள்ளனர்.

இதேபோன்று மாந்தை கிழக்குப்பிரதேசத்திலும் பல குளங்களும் அதற்குட்பட்ட விவசாயக்காணிகளும் வனவளத்திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டுள்ளன.

இவ்வாறு எல்லையிடப்பட்ட குளங்களையும் வயல்களையும் விடுவித்து காணிகளைப் பயிர்ச்செய்கைகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டுமென காணிகளற்ற விவசாய மக்கள் கோரியுள்ளனர். (2-315)

# தலா 5 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் 48 திட்டங்களில் 638 வீடுகள் அமைப்பு

## வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அதிகார சபையினால் 2018 ஆம் ஆண்டிற்கான தலா 5இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் 48 திட்டங்களில் 638 வீடுகள் கட்டப்பட்டு வருவதாக வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமைத்துவப் பணிப்பாளர் த.சுபாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர் பில் அவர் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 15 திட்டங்களில் 201 வீடுகளும் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் பதின்மூன்று திட்டங்களில் 148 வீடுகளும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் பன்னிரண்டு திட்டங்களில் 186 வீடுகளும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 8 திட் டங்களில் 103 வீடுகளும் அமைக்கும் பணிகள் நடை பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-9)

# பூநகரியில் ஒளிவிழா

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் ஒளிவிழா நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பூநகரி நாச்சிக்குடா தூய ஆவியானவர் ஆலய வளாகத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட அரங்கில் பூநகரி பிரதேச செயலர் சி.கிருஸ்னேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஒளிவிழாவையொட்டி நாச்சிக்குடா பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 500 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளும் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் காலை நடைபெற்று அதனைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு ஒளிவிழா நிகழ்வுகள் இடம்பெறும்.

இதில் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக பிரதேச கலை கலாசாரப் பிரிவினரால் தெரிவிக்கப்படுகின்றது. (2-84)

# கரைச்சி பிரதேச சபையினால் 3 உட்புற வீதிகள் புனரமைப்பு

கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட கிளிநொச்சி நகரத்தின் மூன்று உட்புற வீதிகளை நிரந்தமாகப் புனரமைக்கும் பணிகள் கரைச்சிப் பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் முன்மொழிவுக்கு அமைய கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நூறு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட 16 வீதிகளை நிரந்தரமாக புனரமைக்கும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதாவது கிளிநொச்சி நகரில் மத்திய கல்லூரி ஆரம்ப பாடசாலைக்கான வீதி, மின்சார சபை வீதி, நீதிமன்ற அருகாமை வீதி, ஆனந்தபுரம் தொண்டமான் இணைப்பு வீதி என்பன சுமார் ஆறு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுவருகின்றது. இவ்வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன், பிரதேச சபை உறுப்பினர் குமாரசிங்கம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் பார்வையிட்டனர். (2-315)

# சனசமூக நிலையத்திற்கு கட்டடம் கையளிப்பு



(பூநகரி)

பூநகரி பள்ளிக்குடா மீன்பிடிக்கு அருகாமையில் புலம்பெயர் நாட்டில் வசிக்கும் நபரொருவர் தனது தந்தையின் ஞாபகார்த்தமாக சுமார் முப்பது இலட்சம் ரூபாய் நிதியில் இரண்டுமாடிக் கட்டடத்தை அமைத்து பள்ளிக்குடா சனசமூக நிலையத்திற்குச் சென்ற வாரம் கையளித்துள்ளார்.

குறித்த நிலையக் கட்டடத்தைப் பூநகரி பிரதேச சபைத் தவிசாளர் அ.ஐயம்பிள்ளை சென்ற வாரம் திறந்து வைத்தார்.

அமரர் நவரத்தினம் முருகானந்தனின் ஞாபகமாக அவரது மகன் மு.நவநீதன் கட்டடத்திற்கான முழு நிதியையும் செலவிட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையக் கட்டடத்தை பள்ளிக்குடா சனசமூக நிலையத்தலைவர் யோ.பிரான்சில் பொறுப்பேற்றுக் கொண்டார். (2-84)

# நிழல் பிரதி இயந்திரம் பாடசாலைக்கு அன்பளிப்பு



(கண்டாவளை)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் கிளி/ பளை முகாவில் அ.த.க. பாடசாலைக்கு நிழல் பிரதி இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த இயந்திரத்தை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பரமோதயன் ஜெயராணி ஆகியோர் கல்லூரி அதிபரிடம் கையளித்திருந்தனர். (2-315)

# முரசுமோட்டையில் கால்நடைகள் தொடர்ச்சியாக கடத்தப்படுகின்றன

## பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்திலுள்ள முரசுமோட்டைப் பகுதியில் பொதுமக்களால் வாழ்வாதாரத்திற்காக வளர்க்கப்படுகின்ற கால்நடைகள் தொடர்ச்சியாகக் கடத்தப்பட்டு வருவதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

முரசுமோட்டைக் கிராமத்திலும் அதனையண்டிய பகுதிகளிலும் வாழ்ந்து வரும் மக்கள் தமது வாழ்வாதாரத் தேவைகளுக்காக வளர்த்து வருகின்ற நல்லிண கால்நடைகள் தொடர்ச்சியாக கடத்தப்படுவதாகவும் இவ்வாறு கடத்தப்படுகின்ற கால்நடைகள் இறைச்சியாக்கப்பட்டு யாழ்ப்பாணம் மற்றும் அதனையண்டிய பகுதிகளுக்கு இரவோடு இரவாக கொண்டு செல்லப்படுகின்றன என்றும் பிரதேச மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

குறித்த பகுதியில் தொடர்ச்சியாக இவ்வாறு கால்நடைகள் கடத்தப்படுவது தொடர்பில் பொலிஸார் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டபோதும், இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதனைக்கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# ஊர்மனைக்குள் நுழையும் யானைகளால் வாழ்வாதார பயிர்ச்செய்கை அழிப்பு

## தேறாங்கண்டல் மக்கள் கவலை



(கண்டாவளை)

முல்லைத்தீவு, துணுக்காய்,தேறாங்கண்டல் பகுதியில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் பெருமளவான பயிரழிவுகள் ஏற்படுவதாகவும் இப்பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

துணுக்காய் தேறாங்கண்டல் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள், பயிர்ச்செய்கை நிலங்கள் ஆகியவற்றுக்குள் தொடர்ச்சியாக காட்டு யானைகள் உட்புகுந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

தற்போது மாலை 6 மணிக்குப் பின்னர் ஊர்மனைகளுக்குள்ளும் பயிர்ச்செய்கை நிலங்களுக்குள்ளும் நுழையும் காட்டுயானைகள் நெற்பயிர்களையும் ஏனைய வாழ்வாதாரத்திற்கான மரவள்ளி, பூசனி போன்ற தோட்டப்பயிர்களையும் அழித்து வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஊர்மனைக்குள் நுழைந்த காட்டுயானைகள் பெரும் பயிரழிவுகளை ஏற்படுத்தியுள்ளன. கடந்த காலங்களில் இவ்வாறான யானைகளின் தாக்கங்கள் இல்லையெனவும் அண்மைய நாட்களாகவே இவ்வாறு யானைகளின் பாதிப்பு அதிகரித்துள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்குப் பிரேரணை!

## நாடாளுமன்றில் ஜே.வி.பி.முன்வைப்பு



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க மக்கள் விடுதலை முன்னணி சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கூடிய நாடாளுமன்ற அமர்விலேயே குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ முன்வைத்தார்.

மேலும் நாட்டின் எதிர்கால அபிவிருத்தி விடயங்களை கருத்திற்கொண்டே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை இரத்துச் செய்ய வேண்டிய அவசியத்தையும் அவர் தெளிவுபடுத்தினார்.

அத்தோடு குறித்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை இரத்து செய்ய சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்திருந்தார்.

அத்தோடு குறித்த பிரேரணையை விரைவில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்ட மூலத்தை ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தமையின் ஓர் அங்கமாகவே இந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை ஜே.வி.பி. முன்வைத்துள்ளது. (இ-7)

# கோப்பாய்த்தொகுதியில் பல வீதிகள் புனரமைப்பு





(யாழ்ப்பாணம்)

தேர்தல் தொகுதிக்கு 100 மில்லியன் ரூபா எனும் திட்டத்தின் கீழ் கோப்பாய்த் தொகுதிக்குப்பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் சிபார்சின் கீழ் தெரிவு செய்யப்பட்ட அச்சுவேலி, நீர்வேலி, கோப்பாய், அச்செழு, இருபாலை, உரும்பிராய் ஆகிய பகுதிகளின் வீதி புனரமைப்புப் பணிகள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மேற்படி வீதிகளின் புனரமைப்புப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சமய நிகழ்வுகளையடுத்து வீதியின் புனரமைப்புப்பணிகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் ஆரம்பித்து வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினருடன், வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வலி. கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ், வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேசசபையின் பிரதித்தவிசாளர் ம.கபிலன் மற்றும் வலி. கிழக்கு (கோப்பாய்) பிர தேச சபை உறுப்பினர்களான சி.அகீபன், இ.செல்வராசா, கஜேந்திரகுமார் ஆகியோருடன் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டதுடன், இவ்வீதிப்புனரமைப்பினை சிபார்சு செய்து வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன், நினைவுப்பரிசில் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார். (இ-89)

# தேசிய வளங்களை மகிந்த விற்பனை சங்ரிலாவே சாட்சி என்கிறார் ரவி

(கொழும்பு)

நாட்டின் தேசிய வளங்களை விற்பனை செய்தவர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பினரே என்பதற்கு காலி முகத்திடலில் அமைந்துள்ள சங்ரிலா ஹோட்டலே சாட்சியாகுமென நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நீதிக்கான போராட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலி முகத்திடலில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய அரசாங்கம் நாட்டின் வுளங்களை விற்று அந்நியர்களிடம் அடிமையாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாக பொய்யான குற்றச்சாட்டை மகிந்த தரப்பினர் பரப்பி வருகின்றனர்.

ஆனால் மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் தான் அரச காணிகளை குடும்ப தேவைக்காக விற்றார்கள் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

அதாவது இராணுவ தலைமையகத்துக்கு சொந்தமான காணிகளைக் கூட குடும்ப நலனுக்காக தாரைவார்த்தவர் மகிந்த ராஜபக்ஷவே ஆவார். நாம் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை.

மேலும் மகிந்தவால் ஐ.தே.கவுக்கு நிகராக இனி ஒருபோதும் ஆட்சியமைக்க முடியாது. மக்களை ஏமாற்றுவதற்காகவே அவர் பிரதமராக பதவியேற்றபின்னர் பொருட்களின் விலை மற்றும் பெற்றோலின் விலையைக் குறைத்தார். ஆனால் அதனை முறையாக நடைமுறைப்படுத்தவில்லை.

அந்தவகையில் நாம் பல போராட்டங்களுக்கு மத்தியில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளோம்.

ஆகவே இவ்வாட்சியை சிறந்த முறையில் நடத்துவதற்கு அனைவரும் உதவ வேண்டும் என்பதுடன் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும்" என ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



# நாட்டின் அரசியல் குழப்பநிலையைப் பயன்படுத்தி வடக்கிற்கு பெரும்பான்மையினத்தவர்கள் நியமனம்

## இரத்துச் செய்ய ரணிலிடம் கோர கூட்டமைப்பு முடிவு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பநிலையை பயன்படுத்தி பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த 46 பேருக்கு வட மாகாணத்தில் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த ஆறு வாரகாலமாக அரசியல் குழப்பநிலை ஏற்பட்டிருந்த போது, முன்னாள் பிரதமரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைச்சரவை ஒன்று உருவாக்கப்பட்டது. அதில் எரிபொருள் மின்சக்தி அமைச்சராக நியமிக்கப்பட்ட ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவே இந்த நியமனங்களை வழங்கியதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த நியமனங்களை இரத்து செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அபிவிருத்தி செயலணியின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், "கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெற்ற அரசியல் குழப்பங்களைப் பயன்படுத்தி வடக்கு மாகாணத்தில் இலங்கை மின்சார சபையில் காணப்பட்ட வெற்றிடங்களுக்கு தெற்கு இளைஞர்களை நியமனம் செய்துள்ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக க.பொ.த. உயர்தர கல்வி தகுதி உடையவர்களுக்கு வழங்கக்கூடிய வெற்றிடங்களை, க.பொ.த. சாதாரண தர கல்வி தகுதியுடையவர்களுக்கு வழங்கியுள்ளது.

இந்த வெற்றிடங்களுக்கு எமது மாகாண இளைஞர்களை நியமனம் செய்யுமாறு நாம் நீண்டகாலமாக கோரி வந்த நிலையில், அந்த வெற்றிடங்களுக்கு இவ்வாறு இரகசியமான ம்றையில் எந்த விண்ணப்பமும் கோராமல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நியமனம் செய்யப்பட்ட அனைவருமே கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என கண்டறிந்துள்ளோம்.

குறித்த நியமனங்களை இரத்துச்செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அபிவிருத்தி செயலணியின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளோம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# பாராளுமன்ற சமையலறையில் எரிவாயு கசிவு

(கொழும்பு)

பாராளுமன்றில் பணியாற்றும் ஊழியர்கள் அங்கிருந்து திடீர் என வெளியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற சமையலறையில் ஏற்பட்ட எரிவாயு கசிவு காரணமாகவே அங்கு பணியாற்றும் ஊழியர்கள் பாதுகாப்புப் பிரிவினரால் வெளியேற்றப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-7)



இலங்கை-ஐக்கிய நாடுகள் நட்புறவு அமையத்தின் அபிவிருத்தி இலக்குகளுக்கான இளைஞர் சபையினரின் ஏற்பாட்டில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தினுள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது .இதன் போது வைத்தியசாலையில் மழை நீர் தேங்கி நிற்கும் பகுதிகள் இளைஞர் சபையினரால் செப்பனிடப்பட்டுள்ளது. சிரமதானப் பணியில் வைத்தியசாலை அத்தியட்சகர் தயாளினி மகேந்திரன், தாதிய உத்தியோகத்தர், ஊழியர்கள் மற்றும் இளைஞர் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (படம்:-சுபேசன்)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2018-14.01.2019

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

## காரியத்தில் கவனம் தேவை!

தனுசு இராசி வாசகர்களே, விளம்பி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே சனியும் சூரியனும் சஞ்சரிக்கின்றார்கள். உங்கள் இராசிநாதனும் 12 ஆம் இடமான விரய ஸ்தானத்தில் இருக்கின்றார். ஜென்மச் சனியின் ஆதிக்கமும் இருப்பதால் இதுவரை இருந்துவந்த சிக்கல்களிலிருந்தும் சிரமங்களில் இருந்தும் ஓரளவு விடுபட்டாலும் பூரண நிம்மதி என்பது இருக்காது. இன்னும் சில பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். எனவே தைரியமும் தன்னம்பிக்கையும் உங்களுக்குத் தேவை. ஒருவேலையை ஒருமுறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகலாம். விரயங்கள் கூடுதலாக இருக்கும். அரைகுறையாக பல பணிகள் நிற்கின்றதே என்று கவலைப்படுவீர்கள். இதுபோன்ற கிரகநிலை அமையும் நேரத்தில் வழிபாடுகள் தான் உங்கள் வளர்ச்சியில் இருந்த தளர்ச்சியை அகற்றும்.

உங்கள் இராசிக்கு 3ஆம் இடத்தில் செவ்வாய் சஞ்சரிக்கின்றார். பாக்யாதிபதி சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. என்றாலும் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. வீண் பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ள வேண்டாம். மனக்குழப்பம் அதிகரிக்கும் இந்த நேரத்தில், உங்களுக்கு வழிகாட்டும் நல்லவர்களில் ஒருவரின் ஆலோசனையைக் கேட்டு அதன்படி செயற்பட்டால் ஓரளவு திருப்தி அடைய முடியும். குடும்ப உறுப்பினர்களிடம் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்ற நிலையில் இல்லாமல் அனுசரித்து செல்வதன் மூலமே ஆதாயத்தை பெற முடியும்.

பயணங்கள் திடீர், திடீரென மாற்றப்படலாம். புதிய வழக்குகள் ஏற்படாது என்றாலும் கூட, பழைய வழக்குகள் இன்னும் முடிவிற்கு வராமல் நீடித்துக் கொண்டேயிருக்கலாம். 2இல் கேது, 8இல் ராகு இருப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. ஏழரைச் சனியில் முதல் சுற்று மற்றும் மூன்றாவது சுற்று நடப்பவர்கள் தங்கள் உடைமைகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது நல்லது. 2ஆவது சுற்று நடப்பவர்கள் இனிய பலன்கள் காண இயலும். வேதனைகள் நீங்கி வெற்றி கிடைக்கும். சோதனைகள் அகலும். மற்றவர்களுக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும்.

அரசுப் பணியில் இருந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் அமர்வதற்கான அறிகுறிகள் தென்படும். இலட்சியங்கள் நிறைவேற கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய மாதமிது. மாற்று மருத்துவத்தால் உடல்நலத்தைச் சீராக்கிக் கொள்ளும் வாய்ப்பு உருவாகும். அஷ்டமி திதியில் மார்த்தாண்ட பைரவரை வழிபடுவதன் மூலம் எதிரிகள் பலம் குறையும். திருவாதிரை திருநாளில் நடராஜர் வழிபாட்டையும், சனிக்கிழமை அன்று சனி பகவான் வழிபாட்டையும் முறையாக மேற்கொண்டால் சங்கடங்கள் அகலும். சந்தோஷம் கூடும்.




**மீன செவ்வாயின் சஞ்சாரம்**

டிசெம்பர் 17ஆம் திகதி மீன இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். புத்திர ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய், குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போவதால் பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடலாம். தொழிலில் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். "நீண்டதூரப் பயணங்களை உபயோகப்படுத்திக் கொள்ளலாமா?" என்று சிந்திப்பீர்கள். விட்டுப்போன வரன்கள் மீண்டும் வரலாம். உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். பூர்வீக சொத்துத் தகராறுகளும், சகோதர விரோதங்களும் மாறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். மீனச் செவ்வாயைக் குரு பார்ப்பதால் விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்திணைவர்.

**தனுசு புதனின் சஞ்சாரம்**

டிசெம்பர் 29ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் உங்கள் இராசியில் அடியெடுத்து வைக்கும் பொழுது புத ஆதித்ய யோகம் உருவாகின்றது. எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். படிப்பைத் தொடரும் வாய்ப்பு உண்டு. கடமையில் இருந்த தொய்வு அகலும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். மந்த நிலையில் இருந்த வியாபாரம் சூடு பிடிக்கும். பழைய வாகனங்கள் பழுதாகிச் செலவு வைக்கிறதே என்று நினைத்து, அதை கொடுத்து விட்டுப் புதிய வாகனம் வாங்கலாமா என்று சிந்திப்பீர்கள். அந்தச் சிந்தனை வெற்றிபெறும் நேரமிது.

**விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் மாதத் தொடக்கத்தில் லாப ஸ்தானத்தில் இருக்கின்றார். ஜீவன ஸ்தானாதிபதி லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, இக்காலம் உங்களுக்கு ஓர் பொற்காலமாக அமையலாம். பயணத்தால் பலன் கிடைக்கும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலம் வருமானம் வரலாம். தொல்லை தரும் வழக்குகளில் சமரச உடன்பாட்டுக்கு வரலாமா என்று சிந்திப்பீர்கள். தாமதங்கள் அகலும். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். ஆடை, ஆபரணசேர்க்கை உண்டு. பொதுவாழ்வில் இருப்பவர்கள் அதிகார வர்க்கத்தினரின் அனுகூலத்தோடு பொறுப்புகளையும், பதவிகளையும் பெறுவர். ஜனவரி முதல் திகதி அன்று உங்கள் இராசிநாதன் குருவோடு சுக்கிரன் இணைந்து விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இப்பொழுது விபரீத இராஜயோகம் அடிப்படையில் மேலும் நற்பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். இம்மாதம் சூரிய, சனி சேர்க்கை இருப்பதால் சிவனும், விஷ்ணுவும் இணைந்த சிவா-விஷ்ணு ஆலயம் சென்று வழிபட்டு வருவது நல்லது.



**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் அனைவரையும் அனுசரித்துச் செல்ல வேண்டிய மாதமாகும். ஆதாயத்தைக் காட்டிலும் விரயங்கள் கூடுதலாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட அன்பு காட்டுதலும், அனுசரிப்பும் தான் தேவை. குடும்பத் தகவல்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். பெற்றோர்களால் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் ஒருசிலருக்கு விரும்பும் விதத்தில் அமையும். விரயங்கள் அதிகரித்தாலும் பணிபுரியும் இடத்தில் கூடுதல் கவனமுடன் செயற்படுவது நல்லது. நடராஜர் வழிபாடும், அனுமன் வழிபாடும் நன்மை தரும்.



## வழிபாட்டால் வளர்ச்சி கூடும்!

மகர இராசி வாசகர்களே, விளம்பி வருட மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே கேதுவும், சப்தம ஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரிக்கின்றார்கள். எனவே சர்ப்ப கிரகத்தின் ஆதிக்கம் நடைபெறவுள்ளது. ஏழரைச் சனி என்பது முதல் இரண்டரை ஆண்டுகள் விரயச் சனியாகவும், அடுத்த இரண்டரை ஆண்டுகள் ஜென்மச்சனியாகவும், அதன்பிறகு இரண்டரை ஆண்டுகள் குடும்பச் சனியாகவும் நடைபெறும்.

இந்த ஏழரைச் சனி தற்சமயம் உங்களுக்கு விரயச்சனியின் ஆதிக்கமாக இருக்கின்றது. எனவே விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். வரவைக் காட்டிலும் செலவு கூடும். எவ்வளவு விழிப்புணர்ச்சியோடு நீங்கள் செயற்பட்டாலும் பிரச்சினைகள் அதிகரிக்குமே தவிரக் குறையாது.

மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கை கூடுதலாகாமல் பார்த்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். தொழில் செய்பவர்கள் பெரிய அளவில் முதலீடுகள் செய்ய வேண்டாம். இருக்கும் வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தினாலே போதும் என்ற நிலை உருவாகும். புதியவர்களை நம்பி எந்தப் பொறுப்பையும் ஒப்படைக்க வேண்டாம். பொருளாதாரத்தில் ஏற்ற இறக்கநிலை எப்பொழுதும் இருக்கும். இன்பம், துன்பம் ஆகிய இரண்டும் கலந்தது தான் வாழ்க்கை. என்றாலும் கூட, துன்பம் கொஞ்சம் மிகுதியாக இருக்கும் நேரம் இது என்பதால் அதிலிருந்து விடுபட பொறுமையையும், நிதானத்தையும் கடைப்பிடிப்பதோடு வழிபாட்டிலும் கவனம் செலுத்த வேண்டும்.

ராகு-கேதுக்களுக்கு பிரீதியாக சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை யோக பலம்பெற்ற நாளில் செய்தால் நற்பலன்கள் உங்களை நாடிவரும். இருந்தாலும் செய்து வந்த வேலையில் பிரச்சினை, பக்கபலமாக இருப்பவர்கள் விலகுதல், செய்தொழிலை விட்டுவிடும் சூழ்நிலை, பணியாளர்களின் தொல்லை, பணப்பற்றாக்குறை, பாடுபட்ட தற்கேற்ப பலன் கிடைக்காத நிலை, உறவினர்களின் பகை, திறமைக்கு முக்கியத்துவம் கொடுக்காத சூழல் போன்றவை ஏற்படலாம். இவைகளிலிருந்து விடுபட வழிபாடுகளில் முழுமையாகக் கவனம் செலுத்துவது நல்லது. தெசாபுத்திக்கேற்ப தெய்வ வழிபாடுகள், சஞ்சரிக்கும் கோச்சார நிலைக்கேற்ப வழிபாடுகள், குலதெய்வம், இஷ்டதெய்வம் வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

எந்த வழிபாட்டை மேற்கொண்டாலும், தைரியத்தையும், தன்னம்பிக்கையும் கைவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். பிறருக்கு வாக்குறுதி கொடுக்கும் முன் யோசியுங்கள். இம்மாதம் ஆருத்ரா தரிசனம் நடைபெறப்போகின்றது. எனவே இறைவன் தரிசனம் தரும் நாளில் அவர் சந்நிதிக்குச் சென்று மனமுருகி வழிபட்டால் மகிழ்ச்சி நிலையாகக் குடிகொள்ளும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்**

மீன இராசிக்கு டிசெம்பர் 17ஆம் திகதி செவ்வாய் பெயர்ச்சியாகிச் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் சுகாதிபதியாகவும், லாபாதிபதியாகவும் விளங்கும் செவ்வாய், சுக ஸ்தானத்திற்குச் செல்லும் பொழுது மிகுந்த நற்பலன்களை நீங்கள் காண இயலும். குறிப்பாக சகோதர வர்க்கத்தினரின் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைக்கும். விலகிச்சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்திணைவர். சொத்துக்களால் ஆதாயம் உண்டு. இழுபறி நிலைகளில் இருந்த பாகப்பிரிவினைகள் இப்பொழுது முடிவடைவதற்கான அறிகுறிகள் தென்படும். தொழில் கூட்டாளிகள் விலகுவதற்கு ஆயத்தமானால் கூட புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். வருமானப் பற்றாக்குறை அகல புதிய யுக்திகளைக் கையாள்வீர்கள். வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்க இயலாத சூழ்நிலை உருவாகலாம். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும்.

**தனுசு புதனின் சஞ்சாரம்**

டிசெம்பர் 29ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 6, 9இற்கு அதிபதியாக விளங்குபவர் புதன். எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் குறிக்கும் இடம் 6ஆம் இடமாகும். தந்தைவழி உறவைப்பற்றி அறிந்து கொள்ள உதவுமிடம் ஒன்பதாமிடமாகும். அந்த இரண்டு இடங்களுக்கும் அதிபதியாக விளங்கும் புதன் 12ஆம் இடமான தனுசு இராசிக்கு வருகின்றார். எனவே இக்காலத்தில் விபரீத இராஜயோக அடிப்படையில் சில முக்கிய திருப்பங்கள் ஏற்படும். உத்தியோகம், தொழிலில் இருந்த இடையூறுகள் அகலும். உலாவரும் கிரக நிலைகளின் ஆதிக்கத்தால் பணி நிரந்தரம் ஆகாதவர்களுக்கு பணிநிரந்தரம் ஆகும். வெளிநாடு சென்று பணிபுரிய வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு அதுவும் கைகூடும்.




**விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்**

ஜனவரி முதல் திகதி விருச்சிக இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளின் வாழ்க்கையில் சில மாற்றங்கள் உருவாகலாம். கல்யாண வாய்ப்புகள் கைகூடலாம். படிக்கும் பிள்ளைகளாக இருந்தால் வெளிநாடு சென்று படிக்கும் முயற்சியில் ஆர்வம் காட்டினால் அதற்கு நீங்கள் கைகொடுத்து உதவும் சூழ்நிலை உருவாகும். பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். பெண்களால் வந்த பிரச்சினை விலகும். அரசியல்வாதிகளாலும், அரசாங்கத்தாலும் உங்களுக்கு எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் நேரமிது. மன அழுத்தம் மாறும். மதிப்பும், மரியாதையும் கூடும்.

இம்மாதம் ஜென்ம கேது, சப்தம ராகுவிற்கு பரிகாரமாக விநாயகரையும், துர்க்கையையும் வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் விரய ஸ்தானத்தில் சூரிய சனி சேர்க்கை இருப்பதால் எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. குடும்ப விடயங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் ஏற்படாமல் இணக்கம் ஏற்படும்படி நடந்து கொள்வது நல்லது. பெற்றோர் வழியில் பிரச்சினைகள் உருவாகி மறையும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி செலவிடும் சூழ்நிலை உண்டு. சகோதர வழியில் சாதகமான சூழ்நிலை உருவாகும். பொருளாதாரத்தில் வரவும்- செலவும் சமமாக இருக்கும். பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகாரிகளுடன் போராடும் நிலை உருவாகலாம். உங்கள் திறமைக்கேற்ற சம்பளம் கிடைக்கவில்லையே என்று கவலைப்படுவீர்கள். நவக்கிரக வழிபாடும், ஆதியந்தப் பிரபு வழிபாடும் நன்மையை வழங்கும்.

**(தொடரும்...)**




# ஆளுநர் மௌனம் காப்பது ஏன்?

## பேரறிவாளனின் தாய் அற்புதம் ஆதங்கம்






(டில்லி)

உச்சநீதிமன்றம் உத்தரவிட்டு 100 நாட்கள் முடிவடைந்த நிலையிலும் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் மௌனம் காப்பது ஏன் என பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில், 7 பேரின் விடுதலை குறித்து மாநில ஆளுநரே முடிவு செய்யலாம் என உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து 7 பேரின் விடுதலை குறித்து தமிழக அமைச்சரவையும், ஆளுநருக்கு பரிந்துரை கடிதம் வழங்கியது. எனினும் தற்போது வரையில் குறித்த 7 பேரின் விடுதலை குறித்து ஆளுநர் எந்த முடிவும் எடுக்கவில்லை.

இந்நிலையில் சிறைத் தண்டனை பெற்றுவரும் 7 பேரில் ஒருவரான பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

"இன்றுடன் 100 நாட்கள் முடிந்தது. உச்சநீதி மன்றம் உத்தரவிட்டது. அமைச்சரவை பரிந்துரைத்தது. ஆளுநர் மௌனம் ஏன்?

நிரபராதியின் தாய் மனதை மக்கள் புரிந்துகொண்டார்கள். ஆளுநர் மாளிகைக்கு புரிவதெப்போ என கேள்வி எழுப்பியுள்ளார்.

உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அமைச்சரவை பரிந்துரைத்தது. ஆளுநர் மௌனம் ஏன்? நிரபராதி பதியின் தாய் மனதை மக்கள் புரிந்து கொண்டார்கள். ஆளுநர் மாளிகைக்கு புரிவதெப்போ?அத்துடன், நீதி வெல்வதெப்போ, விடுப்பில் வந்தான் "மகிழ்ந்தோம்" விடை பெற்றுச் சென்றான் "உடைந்தோம்" வழியும் கண்ணீர் விழிகளோடு காத்திருக்கிறோம் அவன் "விடுதலைக்கு!" எனவும் பதிவிட்டுள்ளார். (4-7)

# ஏழு தமிழர்களின் விடுதலையி

# மத்திய அரசே காரணம் - ெ

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கால் நூற்றாண்டுக்கு மேல் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரின் விடுதலையில் ஆளுநர் அமைதியாக இருப்பதற்கு மத்திய அரசே காரணமென சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

அம்பேத்கரின் 63 ஆவது நினைவு நாள் பொதுக் கூட்டம் நெமிலி பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே தொல்.திருமாவளவன் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்தாவது.

"பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்வதற்கு இந்திய அரசியல் சட்டத்தில் இடமிருப்பதாகவும் ஆளுநருக்கும் அதிகாரம் உள்ளதாகவும் உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

மேலும் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அமைச்சரவை கூடி, இவ்விடயம் தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆளுநர், எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்



ளாமல் ...
திய அ...
இருக்க...

# பெய்ட்டி புயலால் ஆந்திராவில் நூற்றுக்கணக்கான மக்கள் பாதிப்பு

(லக்னோ)

ஆந்திராவின் கோதாவரி அருகே 'பெய்ட்டி' புயல் கரையைக் கடந்துள்ளது. இதனால், அங்கு பாரிய சேதங்கள் ஏற்பட்டதுடன், பல நூற்றுக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ளனர்.

'பெய்ட்டி' புயலின் கடும் சீற்றம் காரணமாக கடந்த 3 நாட்களாக தமிழக கடலோரப் பகுதிகளில் பலத்த தரைக்காற்று வீசியதுடன், கடல் கொந்தளிப்பாகவும் இருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் பகல் 'பெய்ட்டி' புயல் பலத்த காற்றுடன் கோதாவரி மாவட்டத்தில் கரையை கடந்துள்ளது. இதன்போது, பல்வேறு இடங்களில் புயல் மற்றும் கடும் மழை பெய்தமையினால் மரங்கள், மின்கம்பங்கள் விழுந்துள்ளன.

அதனை அகற்றும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதுடன், புயல் காற்றுடன் பல்வேறு பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக வடக்கு ஆந்திரா, ஒடிசா, தெற்கு சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், மேற்கு வங்கம் மாநிலங்களில் மிதமான மற்றும் பலத்த மழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதைத் தொடர்ந்து ஆந்திரா கடலோர் மாவட்டங்களில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

புயல் ஆபத்தைத் தொடர்ந்து ஆந்திரா கடலோர பகுதிகளில் இருந்த மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கடலோர மாவட்டங்கள் வழியாக பயணிக்கும் 22 பயணிகள் ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

புயல் தாக்கும் பகுதிகளில் மீட்புப்பணிகளை மேற்கொள்ள தேசிய பேரிடர் மீட்பு குழு உட்பட மீட்புக் குழுக்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளன. (4-7)

# ஐ.எஸ்.தீவிரவாதிகள் முன் கொண்டுவரப்பட ே

## அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற நாடியா ம

(டமாஸ்கஸ்)

ஐ.எஸ்.தீவிரவாதிகள் நீதிக்கு முன்னால் கொண்டுவரப்பட வேண்டும் என அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற நாடியா முராத் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கியுள்ள விசேட செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், "ஐ.எஸ்.பிடியில் சிக்கி உள்ள யாசிதி பெண்களை மீட்பதற்




# வைத்தியசாலையில் தீ விபத்து எட்டு பேர் உயிரிழப்பு

## 141 பேர் படுகாயம்

(மும்பை)

மும்பையின் அந்தேரி பகுதியில் செயற்பட்டு வரும் இ.எஸ்.ஐ வைத்தியசாலையில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி ஆறு மாத குழந்தை உட்பட 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

5 மாடி கட்டடத்தில் இயங்கிவரும் மத்திய அரசுக்கு சொந்தமான 'காம்கார்' என்ற தொழிலாளர் நல வைத்தியசாலையில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 4 மணியளவில், வைத்தியசாலையின் 4 ஆவது மாடியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

சிறிது நேரத்தில் தீ ஏனைய இடங்களுக்கும் பரவியதால், அதிகளவில் கரும்புகை வெளியேறி வைத்தியசாலை பகுதி முழுவதையும் புகை மண்டலம் சூழ்ந்துள்ளது.

இதையடுத்து வைத்தியசாலையிலிருந்த வைத்தியர்கள், உள்நோயாளிகள், வைத்தியசாலை ஊழியர்கள் என அனைவரும் வெளியேற முற்பட்ட வேளை, புகையின் காரணமாக பலருக்கு மூச்சுத்திணறலும் ஏற்பட்டுள்ளது.

தகவல் அறிந்து 12 தீயணைப்பு வண்டிகளில் சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு படையினர், 4 மணிநேரம் கடுமையான போராட்டத்திற்கு பின்னர் தீயை அணைத்துள்ளனர்.

தீயணைக்கும் பணி ஒருபுறம் இடம்பெற்றிருக்க, மறுபுறம் வைத்தியசாலைக்குள் சிக்கியிருந்தவர்களை ராட்சத கிரேன் மூலம் மீட்கும் பணியில் தீயணைப்பு படையினர் ஈடுபட்டனர்.

இதில், 141 பேர் காயங்களுடன் மீட்கப்பட்ட போதிலும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளது.

மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக கூறப்படும் நிலையில், இதுகுறித்து வழக்குப்பதிவு செய்துள்ள பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7)

# ஏமனில் அமுலுக்கு வந்த சில நிமி முறிந்து போன போர் நிறுத்த ஒ





(சனா)

உள்நாட்டுப் போர் தீவிரமாக நடந்துவரும் ஏமனில், போர்நிறுத்தம் தொடங்கிய சில நிமிடங்களில் ஒப்பந்தம் மீறப்பட்டு ஆங்காங்கே மோதல்கள் ஆரம்பித்துள்ளன.

ஏமனில் உக்கிரமாக நடைபெற்று வரும் உள்நாட்டுச் சண்டைக்கு தற்காலிக முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

நேற்றையதினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் ஹொடைடா மாகாணம் மற்றும் துறைமுக நகரமான ஹொடைடாவில் போர் நிறுத்தம் செய்வது என்று ஹவுதி கிளர்ச்சியாளர்களும், அரசாங்கத் தரப்பும் ஒப்புக்கொண்டன.

ஹொடைடா துறைமுகம் நிவாரணப் பொருட்கள் செல்வதற்கான நுழைவாயிலாக இருக்கிற முக்கியத்துவம் வாய்ந்த நகரம்.

ஆனால், போர் நிறுத்தம் தொடங்கிய உடனேயே இந்த நகரில் ஆங்காங்கே மோதல்கள் நிகழ்ந்துள்ளன. கிழக்கு ஹொடைடாவில் அரசாங்கப் படைகள் மீது கிளர்ச்சியாளர்கள் ஷெல் குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வியாழக்கிழமை சுவீடனில் ஐ.நா. ஏற்பாடு செய்த பேச்சுவார்

த்தைய...
தத்துக...
ஆண்...
போலை...
வதற்க...
கும் எ...
உ...
அமுலு...
பட்டாலு...
தாக்கு...
மோத...
செயற்...
மடைந்...

# வெளிநாடு

## ...லையில் ஆளுநர் அமைதிக்கு ...ம் - தொல்.திருமாவளவன்



...ளாமல் அமைதியாக இருப்பதற்கு மத்திய அரசின் தலையீடே காரணமாக இருக்க வேண்டுமென்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது" என தொல். திருமாவளவன் மேலும் தெரிவித்தார். (4-7)


## காவிரி பிரச்சினையை இரு அரசுகளும் பேச்சு நடத்தி தீர்வை காண்பதே சிறந்தது

### கர்நாடக முதல்வர் குமாரசாமி வலியுறுத்து

(பெங்களூர்)

காவிரி பிரச்சினையை அரசியலாக்குவதற்கு சிலர் முனைகின்றனர். ஆனால் அதற்கு இடமளிக்காமல் தமிழக அரசும், கர்நாடக அரசும் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தி தீர்வைப் பெற்றுக்கொள்வதே சிறந்ததென கர்நாடக முதல்வர் குமாரசாமி தெரிவித்துள்ளார்.

திருப்பதியில் நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். மேலும் குமாரசாமி தெரிவித்ததாவது.



"கர்நாடக மக்களும் தமிழக மக்களும் எதிரிகள் அல்ல. அவர்கள் ஒற்றுமையாகத்தான் உள்ளனர். அந்தவகையில் தற்போது மழை இல்லாத காரணத்தினாலேயே கர்நாடகவில் இருந்து தமிழ்நாட்டிற்கு காவிரி நீரை அனுப்ப முடியாமல் உள்ளது.

ஆனால் குறித்த பிரச்சினையை சில கட்சிகள் அரசியலாக்க முனைகின்றனர். இதனால் தான் இவ்விடயம் தொடர்பில் உரிய தீர்வை முன்வைக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

ஆகையால் இரு மாநில அரசும் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தினால் காவிரி பிரச்சினையில் சுமுகமான தீர்வை எட்டமுடியும்" என குமாரசாமி வலியுறுத்தியுள்ளார். (4-7)

## ...கேள் நீதிக்கு ...பட வேண்டும்

### ...டியா முராத் கோரிக்கை




...கான முயற்சியில் யாருமே ஈடுபடவில்லை. ஈராக்கிலும் சரி, சர்வதேச அமைப்புகளாக இருந்தாலும் சரி யாரும் அப்பெண்களைக் காப்பாற்ற வரவில்லை.

ஈராக்கில் பெண்கள் ஐ.எஸ்.தீவிரவாதிகளால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகிறார்கள். நான் என் முடிவில் உறுதியாக இருக்கிறேன்.

நான் பாலியல் பலாத்காரம் குறித்து உரக்கப் பேசுவேன். ஐ.எஸ்.குற்றவாளிகளை நீதிக்கு முன்னால் கொண்டுவர வேண்டும்.

மேலும் அரபு நாடுகள் தீவிரவாதிகளுக்கு எதிராகத் தொடர்ந்து சண்டையிட வேண்டும். அப்போதுதான் யாசிதி போன்ற சிறுபான்மையின அமைப்புகள் பாதிக்கப்படாமல் இருப்பார்கள்.

யாசிதி பெண்கள் அவர்கள் இல்லத்துக்குத் திரும்ப உதவுங்கள். எங்களுடைய கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சகோதர,சகோதரிகளுடன் வாழ அனுமதியுங்கள்" என தெரிவித்துள்ளார்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் கடந்த ஒகடோபர் மாதம் அமைதிக்கான நோபல் பரிசு காங்கோவைச் சேர்ந்த மருத்துவரான டெனிஸ் முக்வேஜாவும், ஈராக்கைச் சேர்ந்த நாடியா முராத்துக்கும் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(4-7)

## மெக்சிக்கோவில் எரிமலை வெடிப்பு



(மெக்சிக்கோசிற்றி)

மெக்சிக்கோவில் எரிமலை வெடித்ததில் வெளியேறிய புகை சுமார் 8 ஆயிரம் அடி உயரத்திற்கு சென்றுள்ளது.

இதன்போது எரிமலை ஒன்றின் வாய்ப்பகுதியிலிருந்து நெருப்புக்குழம்பும், தூசியும், சாம்பலும் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. இந்தநிலையில் எரிமலை வெடிப்பு காரணமாக சுற்றியுள்ள கிராம மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

முன்னதாக, எரிமலை குமுறலின் சத்தம் கேட்டதும் அதன் அருகில் தானியங்கி கமராக்கள் பொருத்தப்பட்டன.

பின்னர் புகையை உமிழ்ந்த அந்த எரிமலையானது தொடர்ந்து பெரும் வெடிப்புடன் நெருப்புக் குழம்பையும் வெளிப்படுத்தியது. (4-7)

## கொலை வழக்கில் இந்தியருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை

(டுபாய்)

ஐக்கிய அரபு நாட்டில் சக ஊழியரை கத்தியால் குத்தி கொலை செய்த வழக்கில் இந்திய வாலிபருக்கு 15 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு நாட்டில் கட்டுமான தொழிலில் ஈடுபட்டு வந்த இந்தியாவை சேர்ந்த 26 வயது வாலிபர் ஒருவர் சக ஊழியரை கத்தியால் குத்தி கொலை செய்தார். இந்த சம்பவம் கடந்த ஒக்டோபர் மாதம் நடந்தது.

இது தொடர்பான வழக்கு டுபாய் நீதிமன்றில் நடைபெற்று வந்தது. நேற்றைய தினம் வழக்கை விசாரித்த நீதிபதி அந்த வாலிபருக்கு 15 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து உத்தரவிட்டார். (4-7)

### ஹுவாவி நிறுவன நிதி நிர்வாகி கைது

## கனடா தன்னுடைய தவறை திருத்திக் கொள்ள வேண்டும்

### —சீனா எச்சரிக்கை—

(பீஜிங்)

கனடா தனது தவறை திருத்திக்கொள்ள வேண்டும் என சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீனாவின் ஹுவாவி தொலைத்தொடர்பு நிறுவனத்தின் நிதி தலைமை நிர்வாகி கனடாவில் கைது செய்யப்பட்ட விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரான HUA CHUNYIN இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த விடயத்தில் கனடா தனது தவறை திருத்திக்கொண்டு சீனாவின் ஹுவாவி தொலைத்தொடர்பு நிறுவனத்தின் நிதி தலைமை நிர்வாகியை விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், சீனாவின் ஹுவாவிதொலைத்தொடர்பு நிறுவனத்தின் நிதி தலைமை நிர்வாகியை கைது செய்யுமாறு வெளியிடப்பட்டுள்ள பிடியாணையை இரத்துச் செய்வது தொடர்பில் அமெரிக்கா கவனம் செலுத்த வேண்டும் எனவும் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரான HUA CHUNYIN கோரியுள்ளார். (4-7)

## ...நிமிடங்களில் ...ந்த ஒப்பந்தம்



...த்தையில் இரு தரப்பும் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டன. நான்கு ஆண்டுகளாக நடந்து வரும் இந்த போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான தொடக்கமாக இது இருக்கும் என்று சிலர் நம்பினர்.

உடனடியாக போர் நிறுத்தம் அமுலுக்கு வருவதாக முதலில் கூறப்பட்டாலும், ஆங்காங்கே நடந்து வந்த தாக்குதல்களாலும், கடுமையான மோதல்களாலும் போர் நிறுத்தம் செயற்பாட்டுக்கு வருவது தாமதமடைந்தது குறிப்பிடத்தக்கது. (4-7)

## கார்க்குண்டு வெடிப்பு; ஐந்து பேர் உயிரிழப்பு

(டமாஸ்கஸ்)

சிரியாவில் நிகழ்ந்த கார்க்குண்டுவெடிப்பில் சிக்கி அப்பாவி மக்கள் 5 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவின் அலெப்போ மாகாணத்தில் உள்ள அப்ரின் மாவட்டம் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த நகரில் உள்ள புகழ்பெற்ற சந்தையில் நேற்று முன்தினம் மாலை ஏராளமான மக்கள் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்த வேளை அங்கு பயங்கரவாதிகள் வெடிகுண்டுகள் நிரப்பிய காரை வெடிக்க செய்தனர். இதில் வெடிகுண்டுகள் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறின. அங்கு கரும் புகை மண்டலம் உருவானது.

மக்கள் அனைவரும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நாலாபுறமும் சிதறி ஓடினர். எனினும் குண்டு வெடிப்பில் சிக்கி 5 பேர் உயிரிழந்தனர். மேலும் காரைச் செலுத்தி வந்த பயங்கரவாதிகள் இதில் பலியாகி விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்தத் தகவலை சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (4-7)

# மைத்திரி ஆட்சியை எம்மிடம் தந்திருக்காவிடின் மதம் பிடித்த யானைகளாக மாறியிருப்போம்

## ராஜித சேனாரட்ன மிரட்டல்



(கொழும்பு)

உறங்கிக் கொண்டிருந்த யானைகளை எழுப்பிவிட்டமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி செலுத்தியர்க வேண்டும். ஜனாதிபதியின் உதவியின்றி இந்தளவு மக்கள் கூட்டத்தை திரட்டியிருக்க முடியாதென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

இதேவேளை. உறங்கிக் கொண்டிருந்த யானை எழும்பியதால் உண்டான விளைவேஇதுவாகும் ஆனால் எழும்பிய யானைக்கு மதம் பிடித்தால் என்னவாகும் என இதுவரை யாரும் பார்க்கவில்லை.

ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து, எமக்கு ஆட்சியதிகாரத்தை வழங்கியிராவிடின் இதே காலிமுகத்திடலில் மதம் பிடித்த யானையின் செயற்பாடுகளைப் புரிய வைத்திருப்போம்.

இனி நாமிருக்கும் வரை மகிந்த ராஜபக்ஷ மீளெழுச்சி அடைய முடியாது. எம்மோடு இணைந்து அரசாங்கம் அமைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

அதேபோன்று பொதுஜன பெரமுனவில் இருந்தும் அங்கத்தவர்களை எம்மோடு இணைத்துக் கொள்வோம். மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினரை தனியாளாக்கி, நாம் ஒரு வலுவான கூட்டணியாக முன்வருவோம்.

காலிமுகத்திடலில் நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்திருந்த ஜனநாயக வெற்றிக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட போதே ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-4-7)

# சதித்திட்டம் காரணமாகவே ஜனாதிபதி ரணிலை மீண்டும் பிரதமராக நியமித்தார்

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

சதித்திட்டங்கள் காரணமாகவே ஜனாதிபதி மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்கத் தள்ளப்பட்டார் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் லிபரல்வாத கொள்கையைத் தடுத்து நிறுத்தவே மகிந்த ராஜபக்ஷவை, ஜனாதிபதி பிரதமராக நியமித்தார். என்றாலும் நாட்டை பாதுகாக்க தொடர்ந்தும் நாங்கள் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவோம்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்து ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கும் எதிராக அணிதிரள மக்கள் எங்களுடன் கைகோர்த்துக்கொள்ளவேண்டும்.

ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நினைத்த பிரகாரம் ஆட்சியை கொண்டுசெல்ல இடமளிக்கமாட்டார்.

அதனால் ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு நாங்கள் தொடர்ந்தும் ஆதரவளிக்கத் தயாராக இருக்கின்றோம்.



ஜனாதிபதியின் ஜனநாயக நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க நாங்கள் தொடர்ந்து ஜனாதிபதியுடனே இருப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி பதவியில் இருந்து மைத்திரி உடன் விலக வேண்டும்

## குமார வெல்கம கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடனடியாக தனது பதவியில் இருந்து விலக வேண்டும் என்று, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றிற்குக் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"ஜனாதிபதி அரசியலமைப்பை மீறியுள்ளார் என்று உயர்நீதிமன்றம் கூறியுள்ளது. அரசியலமைப்பை மீறிய ஒருவர், அந்தப் பதவியில் இருக்கக் கூடாது.

எந்த நேரத்திலும் அவருக்கு எதிராக குற்றவியல் பிரேரணையைக் கொண்டு



வர முடியும்.

அதைவிட, அரசியலமைப்பை மீறிய ஒருவர் அந்தப் பதவியைத் தொடர்ந்து வைத்திருப்பது, தொடர்ந்து பல சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்பதையும் அவர் அறிவார்.

ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதற்குத் தகைமையற்ற ஒருவர் நாட்டை நிர்வகிக்கும் போது, ஏனைய சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள், தமது பணிகளை ஆற்றுவது சிரமமாக இருக்கும்.

எனவே, அரசியலமைப்பை தனது வழியில் செயற்பட அனுமதித்து, மைத்திரி பதவியில் இருந்து விலகுவதற்கு இதுவே சரியான தருணம்.

அவர் பதவியில் நீடிப்பதால் பிரச்சினைகள் மோசமாகும். இந்த விவகாரம், அனைத்துலக அளவில் நாட்டின் தேசிய நலன்களையும் பாதிக்கும்.

அனுபவமுள்ள அரசியல்வாதி என்ற வகையில், இந்தச் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காத ஜனாதிபதி ஒருவர் மதிப்புக்குரியவராக இருக்க முடியாது" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# தலைவலி

வணக்கம் சேர்! மறுபடியும் ஆரம்பம்! "என்ன தலைவலியா?" என்று கேட்டு விடாதீர்கள்! தகவல் ஆரம்பம் என்று சொல்ல வந்தேன்! தகவல் என்றால் என்ன... தலைவலி என்றால் என்ன... இரண்டும் ஒன்றுதானே என்று சில பேர் சொல்வது போல் எனக்குத் தோன்றுகிறது...

இரண்டும் ஒன்றோ இல்லையோ... இரண்டுக்கும் சம்பந்தம் இருக்கிறது... தகவலைக் கேட்டுக் கேட்டு உங்களுக்குத் தலைவலி வர வேண்டும்... இல்லை என்றால்... அதைச்சொல்லிச் சொல்லி எனக்குத் தலைவலி வர வேண்டும்...

எப்படி வந்தாலும் சரி... அது இருக்கட்டும் இன்றைக்கு தலைவலியையே ஒரு தகவலா ஆக்கி விட்டால் என்ன? அதுவும் சரிதான்! இந்தத் தலைவலி இருக்கிறதே... இது ஒன்றா... இரண்டா... எத்தனையோ ரகம்!

இருக்கும் தலை ஒன்று! அதிலே ஒற்றைத் தலைவலி... இரட்டைத் தலைவலி... அப்புறம் பித்தத் தலைவலி... பசித்தலைவலி... இப்படி நிறைய! குடும்பத் தலைவலியை சொல்லாமல் விட்டு விட்டீர்களே என்று யாரோ முணுமுணுக்கிறீர்கள்... காதில் விழுகிறது! நான் சொல்லாமல் விட்டதனாலே... அது இல்லாமல் விட்டு விட்டுப் போகிறதா? அது இல்லை!

தலைவலிகளுக்கே தலைவர் என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒரு தலைவலி உண்டு! அதுதான் "மைக்ரேன்" தலைவலி. இது வந்துவிட்டால் அவ்வளவு தான்... தாங்க முடியாது!

சுவீடனில் ஒரு டொக்டர் அம்மா... அவர்களுடைய ஆராய்ச்சி எதைப் பற்றி தெரியுமா? தலைவலியைப் பற்றித் தான்! அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று தெரிந்துகொண்டால் அது நமக்கு உதவியாக இருக்குமே!

பொதுவாக... பல வகையான தலைவலிகள் வருவதற்கு என்ன காரணம் என்று அவர்கள் சொல்கிறார்கள்... கவனமாகக் கேட்டு ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்...

பொதுவாக நாம் செய்யும் வேலையின் தன்மை, வேலை செய்யும் இடத்தில் உள்ள சூழ்நிலை, பொதுவாக நம்மைச் சுற்றியிருக்கும் சூழ்நிலை, இவைகளால் ஏற்படும் பரபரப்பு, பதற்றம், ஆயாசம் இதுதான் காரணம் என்று அவர்கள் சொல்கிறார்கள்! இதில் ஒரு வேடிக்கை என்ன தெரியுமா?

பதற்ற நிலையில் நாம் ஆழ்ந்து சிக்கியிருக்கும்போது இந்தத் தலைவலி வருவதில்லையாம்! பதற்றம் தணிந்ததுக்கு பின்னர்தான் தலைவலி மெதுவாக தலையை நீட்டுதாம்! ஒருவர் கடுமையாக வேலை செய்துகொண்டிருக்கிறார். இல்லை என்றால்... ஒரு வாகனத்தை வேகமாக ஓட்டிக்கொண்டு இருக்கிறார்...

அப்போது தலைவலி வருவதில்லை! வேலை செய்வதை நிறுத்திய உடனே தான் தலைவலி வந்து சேருகிறது! அப்பாடா... வேலை முடிந்தது என்று நினைப்போம்! அவசரப்படாதீர்கள்... இதோ நான் இருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு அது வந்துவிடும். சுறுசுறுப்பாக வேலை செய்துவிட்டு ஓய்வு எடுக்கும் சமயத்தில் இது வருவதற்கு என்ன காரணம்?

இரத்த ஓட்டத்தில் ஏற்படும் மாறுதல்தான் இதற்குக் காரணமாக இருக்கும் என்கிறார் அந்த டொக்டர் அம்மா! வலியை உணர்த்தும் நரம்புகள் எல்லாம் மூளையில் போய் முடியுது! வேலை செய்து ஓய்ந்ததும் இரத்த ஓட்டமும் மெதுவாகிவிடுகிறது! அதனால் மூளைக்குப் போகும் இரத்த அளவு குறைகிறது. உடம்பிலே திசுக்களுக்கு தேவைப்படாத பிராணவாயுவை எடுத்துக் கொண்டு போவது இந்த இரத்தம் தானே! இது மெதுவாகும் போது மூளையில் உள்ள திசுக்களுக்கும் கிடைக்கும் பிராணவாயு அளவும் குறைகிறது! அதனாலே தலைவலி வருவது... என்பது அவர்கள் அபிப்பிராயம்! "மைக்ரேன்" தலைவலிக்கு என்ன காரணம்!

இதுவரைக்கும் அதற்கு திட்டவட்டமான காரணம் எதையும் சொல்ல முடியவில்லை. உலகத்தில் கிட்டத்தட்ட கால்வாசி பேருக்கு இது வருகிறதாம். சாதாரணமாக வம்ச பரம்பரையாக இது வருகிறதாம். 5 பேருக்கு மைக்ரேன் தலைவலி இருந்தால் அதில் 4 பேருக்கு இதுதான் காரணமாக இருக்கிறதாம்! அவர்கள் அப்பா... அம்மா... யாராவது ஒருத்தருக்கு இது இருந்திருக்கும் என்று சொல்கிறார்கள்!

இது வந்துவிட்டால்... வெளிச்சத்தையோ... சத்தத்தையோ... கூட சகித்துக் கொள்ள முடியாது. எங்கேயாவது ஒரு றூமுக்குள்ளே ஓடிப்போய் கதவைச் சாத்திக்கொண்டு முடங்கிக் கொண்டால் போதும் என்று தோன்றும்! சாதாரணமாக இது சிலமணி நேரம் நீடிக்கும்.

சிலபேருக்கு இரண்டு மூன்று நாள் கூட நீடிக்கும். ஓமோன்கள் சுரப்பதில் ஏற்படும் மாற்றங்களும் மைக்ரேன் தலைவலிக்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று நினைக்கிறார்கள்... சாப்பிடும் ஆகாரத்தைப் பொறுத்தும் நமக்கு தலைவலி வருவது உண்டு.

எது ஒத்துக்கொள்ளவில்லையோ அதனுடைய சவகாசமே வேண்டாம்... விட்டுவிடுங்கள்! இதில் ஆறுதலான ஒரு விடயம் என்ன தெரியுமா? 50 வயதைத் தாண்டி விட்டால் தலைவலியினுடைய கடுமை குறைந்து விடுகிறது. சாதாரணமாக 60 வயது வரைக்கும் தான் இந்தத் தலைவலியினுடைய அவதியெல்லாம்! அதற்குப்பின்னர் வந்தால் அது உடம்புக் கோளாறில் வந்ததாக இருக்கும்!

அதனால்... 60 ஆம் கல்யாணம் முடிந்தவர்கள் எல்லாம் தலைவலியை நினைத்துப் பயப்படவேண்டாம்... அறுபதுக்கு பின்னரும் நமக்குத் தலைவலி வராது. நாம் தான் மற்றவர்களுக்குத் தலைவலியாக இருப்போம்!



# பாலித்தீவு- பயணத்தின் அனுபவம்

02

சோ.நிக்கஜ்
அரியாலை.



கிட்டத்தட்ட 24 மணி நேர அலைச்சல் காரணமாக நண்பகல் 12 மணியளவிலேயே எழுந்திருக்கக் கூடியதாக இருந்தது. ஆகவே அன்றைய காலை உணவிற்கான தேவை இருக்கவில்லை. அன்றைய தினத்திற்கான திட்டமும் ஏதும் இல்லாத காரணத்தினால். அருகில் இருக்கும் குட்டா கடற்கரைக்கு (Kuta Beach) சென்று மதிய உணவுடன் நாளைய திட்டத்தை ஆலோசிக்க முடிவெடுத்தோம்.

பாலியில் பருவ மழை மார்கழி மாதத்தில் தான் ஆரம்பிக்கும். ஆனாலும் சாதாரண காலங்களிலும் மழை திடீரென பெய்து ஓயும். நாங்கள் வெளியேறிய போது வெயில் சுட்டெரித்துக்கொண்டிருந்தது. கடற்கரை அருகில் தான் இருந்தது என்பதால் பொடி நடையாகவே கிளம்பினோம். விமான நிலையத்தில் உள்ளூர் சிம் அட்டை ஒன்று வாங்கிக்கொண்டோம்பாதைகளை அறிய இணையத்தினையும் பயன்படுத்திக் கொண்டோம். விமான நிலையத்தை விட நகர்ச் சுற்றுப்புறங்களிலும் சிம் அட்டைகள் விற்கிறார்கள். வெளியே மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

சுற்றுலா தான் அங்கு முக்கிய வருவாய்த்துறை என ஏற்கனவே கூறியிருக்கிறேன் அதற்கேற்றாற்போல் அநேக இடங்களில் சிறு சிறு பெட்டிகளில் சுற்றுலா ஏற்பாடு செய்யும் நபர்கள் வாடிக்கையாளருக்காக காய்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு மேலாக வாகன சாரதிகள் தெருவில் நடந்து போவோரை கையில் பிடித்து இழுக்காத குறையில் ஏற்றுவதற்கு முற்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

கடற்கரையில் வரிசையாக குடைகள் நட்டு பிளாஸ்ரிக் கதிரைகள் போட்டிருந்தார்கள்.நடந்து போன களைப்பில் அப்பாடா உட்காரலாம் என்று பார்த்தால் வந்து பியர் வாங்கிக்கொள்ள சொல்கிறார்கள். பியர் வாங்கினால் அந்தக் கதிரையில் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் இருக்கலாம். இன்னொரு விடயம் நம்மூரைப் போல அங்கு மது விற்பனைக்கு ஏகப்பட்ட கெடுபிடிகள் கிடையாது. எல்லாக் கடைகளிலும் தாராளமாகக் கிடைக்கும். கரையெங்கும் அலைச் சறுக்கு (Surfing) பழக்கி விடுவதாக அழைத்துக்கொண்டிருந்தார்கள்.

கடற்கரையோரமாகவே மதிய உணவினை முடித்துக் கொண்டோம். சாதாரணமாக ஒருவேளை உணவிற்கு 30,000 இந்தோனேஷிய (350/- இலங்கை) ரூபாயிலிருந்து செலவாகலாம். இன்னும் அதிகமாகவும் ஆகலாம். அது நீங்கள் தெரிவு செய்யும் உணவு மற்றும் உணவகத்தை பொறுத்தது. அவர்களின் பிரதான உணவாக அரிசி இடம் பெறுகிறது.

நாளைய தினத்திற்கு ஆற்றில் white water drafting எனும் படகு சவாரி செய்யலாம் என முடிவெடுத்து திரும்பும் வழியில் விபரங்கள் சேகரித்த வண்ணம் வந்தோம். பாலியில் முக்கியமாக இரண்டு இடங்களில் இடம்பெறுகிறது. ஒன்று Ayung River மற்றொன்று Telaga Waja River. இதில் முன்னையது ஆபத்துக் குறைவானது. பின்னையதில் வீழ்ச்சிகள் அதிகம். நாங்கள் இரண்டாவதிற்கே செல்வதற்கு ஒரு ஏற்பாட்டுக் குழுவிடம் பேரம் பேசி முடித்திருந்தோம்.



பேரம் பேசி திரும்பிய கையில் வழி மறித்து ஒரு ஓட்டுநர் படகு சவாரியுடன் சுற்றிப்பார்ப்பதற்கு சில இடங்கள் அழைத்துச் செல்வதாகக் கூறியதால் ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள் என அவரிடம் சற்று அதிக விலையில் உடன்பாட்டுக்கு வந்து அடுத்த நாள் 8.30 மணிக்கு வருமாறு அனுப்பினோம்.

சில கடைகள் ஏறி இறங்கினோம். சில தெருக்களில் சுற்றினோம். 2.5 KM தூரத்தில் இருந்த லெகியான் தெருவிற்குச் செல்ல ஒரு meter taxi சாரதி ஊரைச் சுற்றிக் காட்டினார். அதிலிருந்து முன் பேரத்துடன் தான் வாகனத்தில் ஏற வேண்டும் என பாடம் படித்துக்கொண்டோம்.

பாலியில் இருப்போரில் 84 வீதத்தினரின் மரபணு அவுஸ்திரேலியர்களுடனும் 12 வீதத்தினரின் மரபணு இந்தியர்களுடனும் ஒத்துப் போகிறது என்கிறார்கள்.

எது எப்படியோ இந்த கதையெல்லாம் நமக்கு தேவையற்றது. தேவையான தகவல் இதுதான். இங்கு சுற்றுலா வருபவர்களில் அதிகமானவர்கள் அவுஸ்திரேலியர்கள். அடுத்தது சீனர்கள். அதற்குப் பின் இந்தியர்களை குறிப்பிடலாம். இலங்கையிலிருந்து வெளிநாட்டுக்கு சுற்றுலா செல்வதே ஆச்சரியமானது. இதில் எங்களுடைய கணக்கெல்லாம் தேவையில்லை.

அவுஸ்திரேலியர்களுக்கு பாலி மீதான காதலுக்கு காரணம் உண்டு. கொழும்பில் வேலை செய்து விட்டு சனி, ஞாயிறு யாழ்ப்பாண வீட்டில் தேவனே என உட்கார 10 மணிநேரப் பயணம் செய்து வருவதில்லையா, அதுபோலத்தான்.

(பயணம் தொடரும்)

---

மகிந்தவால் இனி எதையும் செய்ய முடியாது

## எமது இறுதி இலக்கு ஜனாதிபதித் தேர்தலே

## சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவால் இனி எதையும் செய்ய முடியாது என்பதை புரிந்து கொள்வதற்கு கிடைத்த நல்ல சந்தர்ப்பம் தான் கடந்த 50 நாட்கள் என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பு- காலிமுகத்திடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 50 நாட்களாக நாம் காட்டினோம் அப்பச்சிக்கும் முடியாது. ராஜபக்ஷவுக்கும் முடியாது என்பதைத் தெரிவித்தார்.

இன்றைய நிலையில், நாடாளுமன்றத்தில் பலமிக்க அரசாங்கத்தை அமைப்பது அவசியமாகும்.

அதேபோல் எமது இறுதி இலக்கு 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலாகும். ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் பலம் மிக்க நாடாளுமன்றத்தை அமைப்பது அவசியம் என்றும் தெரிவித்தார். (இ-7)

---

51 முறைப்பாடுகள் பதிவு

## பல மில்லியன் ரூபாய்களை மோசடி செய்த பெண் கைது

(கொழும்பு)

நபர்களை கனடாவுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து பல மில்லியன் ரூபாய்களை மோசடி செய்த பெண்ணொருவர், நவகமுவ பிரதேசத்தில் வைத்து குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணுக்கு எதிராக 51 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இதற்கமைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளாரென்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் சந்தேக நபரைக் கைதுசெய்யும் போது, அவரிடமிருந்து 350 கிராம் நிறையுடைய தங்க ஆபரணங்கள், 50 ஆயிரம் ரூபாய் பணம், வெளிநாட்டு கடவுச் சீட்டுகள் 72, வங்கிப் புத்தகங்கள் 51 மற்றும் 50 ஏ.ரி.எம் அட்டைகள் என்பன மீட்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

---

நிதியமைச்சர் யார்?

## மங்கள-ரவி இடையில் கடும் மோதல்!

ரணில் திண்டாட்டம்



(கொழும்பு)

புதிய அமைச்சரவை நியமனம் தாமதமடைந்து வரும் நிலையில் நிதியமைச்சர் பதவி தொடர்பாக, ஐ.தே.கவின் முக்கிய தலைவர்களான மங்கள சமரவீரவுக்கும் ரவி கருணாநாயக்கவுக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தை அடுத்து, நிதியமைச்சர் பதவியிலிருந்து விலகிய ரவி கருணாநாயக்க மீண்டும் அந்தப் பதவியைப் பிடிக்கப் போட்டி போடுகிறார்.

அதேவேளை, ஏற்கனவே நிதியமைச்சராக பதவி வகித்த மங்கள சமரவீரவும் அந்தப் பதவி தனக்கே வழங்கப்பட வேண்டும் என்று கோரி வருகிறார். இதனால் ஐ.தே.கவில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக குற்றம்சாட்டப்பட்ட ரவி கருணாநாயக்கவுக்கு மீண்டும் நிதியமைச்சர் பதவி வழங்கப்படுவதற்கு சிவில் சமூகப் பிரதிநிதிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

அதேவேளை, இவரை நிதியமைச்சராக நியமிப்பதற்கு இணங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

## நுவரெலியாவில் துகள் உறைபனி!



(ஹற்றன்)

நுவரெலியாவில் துகள் உறைபனி உருவாகக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக இலங்கை வளிமண்டல வியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்திணைக்களம்நேற்று வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் நாடு முழுவதும் பிரதா்னமாக சீரான வானிலை மற்றும் ஓரளவு குளிரான வானிலையும் எதிர்பார்க்கப்படுவதுடன் நாளை மறுதினம் 20 ஆம் திகதியிலிருந்து வானிலையில் சிறிய மாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் சில இடங்களில் அதிகாலை வேளையில் துகள் உறைபனி உருவாகக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சில பிரதேசங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

# இரத்தினபுரி மாநகர சபையில் உருவப்படங்களால் சர்ச்சை



(இரத்தினபுரி)

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவி ஏற்றதன் பின்னர் இரத்தினபுரி மாநகர சபையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உருவப்படத்தை அகற்றிவிட்டு அந்த இடத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் உருவப்படத்தை காட்சிப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் நடவடிக்கை மேற்கொண்டனர்.


நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

எனினும் அங்கு வந்த இரத்தினபுரி நகர முதல்வர் ரணில் விக்கிரமசிங்கவின் உருவப்படத்தை அகற்றிவிட்டு அந்த இடத்தில் மீண்டும் மகிந்த ராஜபக்ஷவின் உருவப்படத்தை காட்சிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட கட்டடங்களை புதுப்பித்து மீள் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை

## உறுப்பினர் அனுஷியா கோரிக்கை



(வேலணை)

வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கடைத் தொகுதிகளை மீண்டும் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச சபை உறுப்பினர் திருமதி அனுஷியா ஜெயகாந்த் தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி தலைமையில் சபையின் சபா மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வேலணை பிரதேசத்தின் நகரமாக வங்களாவடி பகுதி காணப்படுகின்றது. ஆனால் இதன் அபிவிருத்தி என்பது மிக மோசமான நிலையிலேயே காணப்படுகின்றது. ஒரு பிரதேச சபை என்பது அந்தப் பிரதேசத்தினதும் மக்களதும் அபிவிருத்தியை மையமாக கொண்டதொன்றாகவே காணப்படுகின்றது. அந்த வகையில் வேலணை பிரதேசத்தின் நகரமாக காணப்படும் வங்களாவடி பகுதியை நவீனப்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டியது எமது பிரதேச சபையின் கடமையாகும்.

எமது பிரதேச சபைக்குரிய கடைகள் பல தனி நபர்களுக்கு கடந்த காலங்களில் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. அவற்றுள் அநேகமான கடைகள் பாழடைந்து காணப்படுகின்றன.

இவ்வாறு பாழடைந்து காணப்படும் கடைகளால் நகரப்பகுதி பொலிவிழந்ததாக காணப்படுகின்றது. அந்தவகையில் எமது பிரதேசத்தின் நகரப்பகுதியை அபிவிருத்தி செய்யும் முகமாக அதன் முதற்கட்டமாக குறித்த கடைகளை புதுப்பித்து அதை நவீன கடைத் தொகுதிகளாக மாற்றி அமைப்பதுடன் அக்கடைகளை ஏற்கனவே சபையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டவர்களுக்கு மீள் ஒப்பந்தம் மூலமோ அல்லது புதிய ஒப்பந்தம் மூலமோ வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் நகரை அபிவிருத்தி செய்வதுடன் சபையின் வருமானத்தையும் இதனூடாக அதிகரிக்க முடியும்.

யாழ்.மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களை எடுத்துக்கொண்டால் பல உள்ளூராட்சி மன்றங்கள் நவீன கட்டட வசதிகளுடன் புதிதாக அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. அத்தகைய ஒரு நிலைப்பாட்டை எமது பிரதேசத்திலும் ஏற்படுத்த மத்திய அரசுடன் நாம் உடன்பாடுகளை ஏற்படுத்த வேண்டும் என்பதுடன் நகரை அபிவிருத்தி செய்ய தற்போதைய எமது இந்த சபையின் ஆட்சிக் காலத்தில் முழுமையான நடவடிக்கைகளை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அதற்கேற்ற வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்கும் முகமாக வேலணையின் நகரப்பகுதியான வங்களாவடி பகுதியின் கடைத் தொகுதிகளை முதற் கட்டமாக புனரமைத்து அவற்றை மீள் ஒப்பந்தம் செய்யுகைக்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இச்சபையில் ஒரு பிரேரணையாக முன்வைக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## முன்பள்ளிக்கு பெயர்ப்பலகை




(பொற்பதி)

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் செம்பியன்பற்று சென் பிலிப் நேரிஸ் முன்பள்ளிக்கான பெயர்ப்பலகையும் பாண்ட் வாத்திய இசைக் கருவியும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வருட நிதி ஒதுக்கீட்டின் ஊடாக மாகாண சபை உறுப்பினர்களான கேசவன் சயந்தன் 50 ஆயிரம் ரூபாவை முன்பள்ளி பெயர்ப்பலகைக்கும் ச.சுகிர்தன் 50 ஆயிரம் ரூபாவை பாண்ட் வாத்திய இசைக்கருவிக்காகவும் வழங்கியுள்ளனர். (இ-64)

# புதிய அரசாங்கத்திற்கு தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவு தேவைப்படாது

## சுதந்திரக்கட்சி சிரேஷ்ட உறுப்பினர்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசாங்கத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 10 முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளிக்கவுள்ளதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு அரசாங்கத்திற்கு தேவைப்படாது என சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அவர்கள் ஐக்கியதேசியக்கட்சியுடன் இணையமாட்டார்கள். தனியான குழுவாக இயங்குவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தன்னை பலப்படுத்துவதற்காக பொதுஜன பெரமுனவிலிருந்து விலகி செயற்பட வேண்டும் எனவும் கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புதிய அரசாங்கத்தை உருவாக்கும் முயற்சிக்கு உதவ விரும்பும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பல நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பின்னரும் முடிவு எதுவும் எட்டப்படவில்லை என ஐக்கியதேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# அரசியல் மாற்றத்தை வரவேற்ற அமெரிக்கா



(கொழும்பு)

இலங்கை அரசியலமைப்பு மற்றும் ஜனநாயக முறைமைகளுக்கு அமைய ஏற்பட்ட அரசியல் மாற்றத்தை வரவேற்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி டெப்லிஸ் (**Alaina B.Teplitz**) தனது டுவிட்டர் தளத்தில் பதிவொன்றின் ஊடாக இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். இலங்கை அரசாங்கத்துடனும் மக்களுடனும் தமது நட்புறவு தொடரும் என்றும் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தை வரவேற்பதாக அவுஸ்திரேலியாவும் தெரிவித்துள்ளது. (இ-7)

# ஆயிரம் பலா மரக்கன்றுகள் பயனாளிகளுக்கு வழங்கல்



(சாவகச்சேரி)

தென்மராட்சியில் விவசாய அமைச்சின் ஊடாக இரண்டாம் கட்டமாக தற்போது ஆறாயிரம் பலா மரக்கன்றுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

விவசாய அமைச்சின் பத்து இலட்சம் பலா மரக்கன்றுகளை நாட்டும் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பகுதியில் இரண்டாவது கட்டமாக வட்டார ரீதியாக ஆறாயிரம் பலா கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ப.நந்தகோபால் கல்வயல் வட்டாரத்தில் 700 பலா கன்றுகளையும், நகர சபை உறுப்பினர் வேலாயுதபிள்ளை 300 பலா கன்றுகளையும் மற்றும் சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்கள்,முன்னாள் பிரதி விவசாய அமைச்சரின் இணைப்பாளர்கள் பலா கன்றுகளை பயனாளிகளுக்கு வழங்கினர்.


முதற்கட்டமாக கடந்த வாரம் தென்மராட்சியில் இரண்டாயிரம் பலா மரக்கன்றுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

123



"இலங்கையைக் கண்டி கரை யோரம் என்ற இரு மாகாணங்களாகப் பிரித்து அவற்றுக்கு வெவ்வேறு வகையினதாக அரசாங்கத்தை அமைப்பதைக் கோல்புறூக் கடுமையாக எதிர்த்தார். கண்டியை தனியாக அமைப்பாக நிறுவுவது அரசியலற்றது எனவும் தீவு முழுவதும் தேசாதிபதியினதும் சபையினதும் நிர்வாகத்தின் கீழ் இருக்க வேண்டும் எனவும் அவற்றின் பெயரால் பிரகடனப்படுத்தப்பட்ட சட்டங்கள் நாடு முழுவதுமே செயற்பட வேண்டுமெனவும் இவர் விதந்துரைத்தார்"

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

இலங்கையைக் கண்டி கரையோரம் என்ற இரு மாகாணங்களாகப் பிரித்து அவற்றுக்கு வெவ்வேறு வகையினதாக அரசாங்கத்தை அமைப்பதைக் கோல்புறூக் கடுமையாக எதிர்த்தார்.

கண்டியை தனியாக அமைப்பாக நிறுவுவது அரசியலற்றது எனவும் தீவு முழுவதும் தேசாதிபதியினதும் சபையினதும் நிர்வாகத்தின் கீழ் இருக்க வேண்டும் எனவும் அவற்றின் பெயரால் பிரகடனப்படுத்தப்பட்ட சட்டங்கள் நாடு முழுவதுமே செயற்பட வேண்டுமெனவும் இவர் விதந்துரைத்தார்.

பிரித்தானிய ஆட்சிக்கு எதிரான கண்டி எதிர்ப்பைத் தவிர்ப்பதும் நாட்டை அமைதியாக ஆட்சி செய்வதற்கு இலகுவான நிர்வாக கோல்புறூக்கின் இந்தத் திட்டத்திற்குக் காரணங்களாக இருந்தன.

இவருடைய சிபாரிசு ஏற்கப்பட்டு ஒக்டோபர் 1833 இல் அமுலுக்கு வந்தது. அக்காலத்திலிருந்து ஒரே நிர்வாக அலகாகத் தொடர்ந்து ஆட்சி செய்யப்பட்டது. கண்டி கரையோர மாகாணங்களின் இணைப்பைத் தொடர்ந்து அப்போதிருந்த பதினாறு மாவட்டங்களையும் ஐந்து மாகாணங்களாக மாற்றவேண்டுமெனவும் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு அரசாங்க அதிபரின் கீழ் இயங்கவேண்டுமென்றும் தேவைக்கேற்ப அரசாங்க அதிபருக்கு ஐரோப்பிய அல்லது சுதேசி உதவியாளர்கள் அமர்த்தப்பட வேண்டுமென்றும் கோல்புறூக் சிபாரிசு செய்தார்.

இந்த யோசனை, இதைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட நிர்வாகத்துக்கு அடிப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே காலத்தில் (ஐப்பசி 1833) நடைமுறைக்கும் வந்தது. முழு நாட்டினதும் தேவைகளுக்குப் பொருத்தமான ஒரே சீரான உள்ளூர் நிர்வாகத்தை நிறுவுவதே இதன் பிரதான நோக்கமாக இருந்தது.

அநேகமான மாகாணங்கள் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அரசாங்க அதிபரும் அம்மாகாணம் முழுவதற்கும் பொறுப்பாக இருந்தார். அரசாங்க அதிபரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இல்லாத மாவட்டங்கள், உதவி அரசாங்க அதிபர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன.

அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர்கள் யாவரும் பிரித்தானிய அதிகாரிகளாக இருந்ததுடன் அவர்கள் நம்பிக்கை, விசுவாசம் உள்ளவராய் இருப்பதுடன் பிரித்தானிய ஆட்சியை ஆதரிப்பவர்களாகவும் இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

ஐந்து மாகாணங்களும் அவற்றின் பிரதான நகரங்களும் வருமாறு, மேல்மாகாணம்- கொழும்பு, மத்திய மாகாணம்- கண்டி, தென்மாகாணம்- காலி, வட மாகாணம்- யாழ்ப்பாணம், கிழக்கு மாகாணம்- திருகோணமலை என்பனவாகும்.

1889 அளவில் ஒன்பது மாகாணங்கள் இருந்தன. ஆனால் உள்ளூர் நிர்வாகத்தின் பொதுவான கட்டமைப்பு மாறாதிருந்தது. 1845 இல் வடமேல் மாகாணம், 1873 இல் வடமத்திய மாகாணம், 1886 இல் ஊவா. மாகாணம், 1889 இல் சப்ரகமுவ மாகாணம் என்பன புதிய மாகாணங்களாக உருவாக்கப்பட்டன.

பிரித்தானியர் ஆட்சியில் அரசரினால் நியமிக்கப்பட்ட தேசாதிபதி நாட்டின் தலைவராக தலைநகர் கொழும்பில் இருந்தார். அவர் தனது நிர்வாக சபை உறுப்பினரதும் மாவட்ட அரசாங்க அதிபரினதும் உதவியுடன் நாடு முழுவதையும் நிர்வகித்தார்.

உள்ளூர் நிர்வாகத்தில் குடியேற்ற சிவில் சேவையை சேர்ந்த அரசாங்க அதிபரும் பல உத்தியோகபூர்வ உதவியாளரும் கொழும்பிலிருந்த குடியேற்ற ஆதிக்கத்தைப் பிரதிநிதிப்படுத்தினர்.

தமிழ்ப் பிரதேசத்தைப் பொறுத்தவரை மாவட்ட, கிராம மட்டங்களில் ஆழமாக வேரூன்றியிருந்த உள்ளூர் மக்களின் ஆதிக்க அமைப்பை நீக்க முடியாத நிலையில் பிரித்தானியர் செல்வாக்கு மிக்க நிலவுடைமையாளர்களையும் நடைமுறையிலிருந்த சாதிய அல்லது வகுப்பு அடிப்படையிலான கிராமக் கட்டமைப்பையும் உபயோகிக்கும் நிலைக்கு ஆளாகினர்.

இதன் பெறுபேறாக ஏற்கனவே முதலியார், முகாந்திரம் என்ற பதவிகளைக் கொண்டிருந்த அனுபவமிக்க அரசாங்க அதிகாரிகளின் கீழ் இயங்கும் உத்தியோகத்தராக பிரபல வெள்ளாளரை பிரித்தானியர் நியமித்தனர்.


பிரதேச அதிகாரத்தின் இருப்பிடமாகக் கச்சேரி, உதவி அரசாங்க அதிபர் பணிமனை என்பன இருந்ததனால் முதலியாருக்குச் செல்வாக்கு அதிகமாகவிருந்தது. கிராம மட்டத்தில் விதானை அல்லது கிராமத் தலைவரும் குறிப்பிடுமளவுக்குச் செல்வாக்கு உடையவர்களாக இருந்தனர்.

கிராமத்தின் எல்லா சிவில் குற்றவியல் காரியங்களும் முதலில் விதானையாரிடத்தில் வந்தே பின்னர் உயர் அதிகாரிகளிடத்துக்குப் போயின. விதானையார் ஏறக்குறைய பொலிஸ் உத்தியோகத்தரின் அதிகாரத்திற்கு இணையான அதிகாரத்தைக் கொண்டிருந்தார்.

மேலும் விதானைமாரே அரசாங்கக் கட்டணங்களையும் வரிகளையும் அறவிடும் பொறுப்பைக் கொண்டிருந்தனர். அவர்களது சொந்தக்காணிகளுக்கு அவர்களின் பதவிக் காலம் வரையில் வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தபோதும் அவர்கள் அறவிடும் வரியில் ஐந்து சதவீதத்தைவிட வேறெந்த மேலதிக வருமானமோ, படிப்பணமோ அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இருந்த போதிலும் இச்சலுகை அவர்களைச் செல்வந்தராக மாற்றியது என்பதில் ஐயமில்லை.

(தொடரும்)

# மீண்டும் பெரும் போராட்டம் வெடிக்கும்! கிழக்கு முன்னாள் முதலமைச்சர் எச்சரிக்கை



(ஏறாவூர்)

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கான இலங்கை ஆசிரியர் சேவை 31(அ) தரத்திற்கு மாவட்ட ரீதியாக பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்கு தற்போது கோரப்பட்டிருக்கும் விண்ணப்பங்கள் உடன் நிறுத்தப்பட்டு அது மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் பட்டதாரிகள், பொதுமக்கள் வீதியில் இறங்குவர். இதற்கான பாரிய போராட்டம் வெடிக்கும் என்று கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட் அதிரடி அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இந்த நியமனங்கள் வழங்குவது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பில் கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட பட்டதாரிகளுக்கு மேலதிகமாக பதுளை, பொலநறுவை, அநுராதபுரம், கண்டி, மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டத்தில் வாழும் பட்டாதாரிகளுக்கும் சிங்கள பாடசாலைகளுக்கான நியமனம் என்ற ரீதியில் உள்வாங்கப்படுவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது.

இது குறித்து தெளிவுபட ஆராயவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நான் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த கால கட்டத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேலையில்லாத பட்டதாரிகளை ஆசிரிய சேவைக்குள் உள்வாங்குவதற்கான தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்து வந்தேன்.

கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட கிட்டத்தட்ட 5 ஆயிரத்து 400 இற்கும் அதிகமான பட்டதாரிகள் இந்த வேலைவாய்ப்பில் தமக்கான சந்தர்ப்பங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

அந்தவகையில் கடினமான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டதன் மூலமாக இந்த 5 ஆயிரத்து 400 பட்டதாரிகளுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்பட்டது.

எனினும், அவரால் தடங்கல் ஏற்பட்ட நிலையில் நான் இதனை எனது தனிப்பட்ட முயற்சியின் மூலமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு முன்வைத்தேன்.

பிரதமரின் ஆலோனைக்கு அமைய அவரது பொருளாதார ஆலோசகர் பாஸ்கரலிங்கத்துடன் இதற்கான பேச்சு நடைபெற்று 5 ஆயிரத்து 400 பேருக்கும் நியமனம் வழங்குவது எனவும், முதற்கட்டமாக ஆயிரத்து 700 பேருக்கு வழங்க இடம் ஒதுக்கப்பட்டு இதற்கான நிதி ஒதுக்கீடும் திறைசேரியால் வழங்கப்பட்டது.

இந்நிலையில், மாகாண சபை ஊடாக நாம் இந்த நியமனங்களை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகளை நடத்தினோம். இதன்போதும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தோரை உள்வாங்க வேண்டும் என்ற பிரச்சினை எழுந்தது. எனினும், நாம் அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை.

இக்கால வேளையில் மாகாண சபை கலைக்கப்பட்டமை காரணமாக இந்த விடயம் காலதாமதத்துக்கு உள்ளானது. பின்னர் இந்த நியமனங்களில் ஆயிரத்து 300 நியமனங்களை 2017 நவம்பரில் ஆளுநர் வழங்கியிருந்தார்.

இந்நிலையில், தற்போது எம்மால் பெறப்பட்ட வெற்றிடமாகவுள்ள ஏனைய இடங்களுக்கான நியமனங்களை வழங்குவதற்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நமது மாகாணப் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பைப் பிரதான நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த வாய்ப்பை வேறு எந்த விதத்திலும் - நியாயமற்ற முறையிலும் கடந்த காலங்களைப் போன்று வழங்க எடுக்கப்படும் திரைமறைவு முயற்சிகளை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

கடந்த காலங்களில் ஆளுநர்களின் அதிகாரங்களின் ஊடாக மாகாணத்தைத் தவிர்ந்த பட்டாதாரிகளுக்கு இவ்வாறான நியமனங்கள் வழங்கப்பட்டு வந்தன.

இதனூடக நியமனங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் சிறிய காலத்தின் பின்னர் இடமாற்றங்களைப் பெற்று மாவட்டங்களையும் மாகாணத்தையும் விட்டு தத்தமது மாவட்டங்களுக்குச் சென்றதன் காரணமாக வெற்றிடங்கள் வெற்றிடங்களாக மட்டும் உள்ளன.

எனது பதவிக்காலத்தில் இவை குறித்து நான் பல்வேறு ஆதாரங்களைப் பெற்றுக்கொண்டமை காரணமாக பல காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

குறிப்பாக இவ்வாறான வெற்றிடங்கள் முதலில் மாகாணத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளித்து நிரப்பப்பட வேண்டும். பின்னர் உரியவர்கள் இல்லை என்ற நிலையில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு மட்டுமே ஏனைய மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதே எனது பணிப்புரையாக இருந்தது.

கடந்த கால நடவடிக்கைகளைக் கருத்தில்கொண்டு இந்த விடயத்தில் தீர்க்கமாக ஆராய்ந்து நியாயமான நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இது குறித்து மாகாண மட்டத்தில் இயங்கும் பல்வேறு பட்டதாரிகள் அமைப்புகள் எனது கவனத்துக்கு முன்வைத்திருக்கின்றன.

எனவே, முதலில் இந்த விண்ணப்பக்கோரலை உடன் இரத்துச் செய்ய வேண்டும். தற்போது பதவி ஏற்றுள்ள பிரதமரது அமைச்சரவை நியமனங்கள் நடைபெற்ற பின்னர் நான் அவரை நேரில் சந்தித்து இவ்விடயம் குறித்து துரித நடவடிக்கை எடுப்பேன் என்றும் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார். (இ-7)

## கடைக்குள் பாய்ந்த வாகனத்தால் பெண் ஒருவர் பலி! ஒருவர் காயம்

(ஹொரண)

புலத்சிங்கள - ஹொரண வீதியின் 52 ஆவது கட்டைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹொரண பகுதியில் இருந்து புலத்சிங்கள நோக்கி பயணித்த மோட்டார் வாகனம் ஒன்று கட்டுப்பாட்டையிழந்து அருகில் இருந்த கடை ஒன்றில் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த கடையில் இருந்த இரு பெண்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெதகேவத்த. கோவின்ன பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மோட்டார் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் புலத்சிங்கள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1591


### தனு

மனைவியின் எடை குறையவில்லை என்ற கணவரின் புகாருக்கு ஜிம் மனேஜர் அனுப்பிய புகைப்படம்



### ரோசா

காலையில எந்திருச்சு வட்ஸ்அப் போகலாமா... இல்ல பேஸ்புக் போகலாமான்னுதான் தோனுதே தவிர வேலைக்கு போக தோனமாட்டேங்குது



### கயல்விழி

எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகனும் நடப்பதெல்லாம் நன்மைக்கேனு சொல்றாங்களே எத்தனை கிலோ மீற்றர் நடந்தா நல்லது



### டிலான்

உங்களை எவரோடும் ஒப்பிடாதீர்கள், அவரவர் வழியில் அவரவர் சிறந்தவர், உங்கள் வழியில் நீங்கள்தான் சிறந்தவர்




### அபி

கனவுகள் எல்லாம் நனவாகும் நிறையக் காயங்களுக்குப் பிறகு



### சுஜி

உடைந்த ஒன்றை ஒட்ட வைக்கவும் முடியாமல் தூக்கி எறியவும் முடியாமல் தவிப்பதெல்லாம் பிடித்தவற்றில் மட்டுமே சாத்தியம்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# “குற்றங்களுடன் தொடர்புபடாதவர்கள் தடுத்து வைக்கப்படுவதை தவிர்க்கவும்”

## சிறிநேசன் எம்.பி.வேண்டுகோள்



(ஏறாவூர்)

குற்றங்களுடன் தொடர்பு படாதவர்கள் கைதுசெய்யப்பட்டு, நீண்ட நாட்கள் தடுத்து வைக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டுமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் வேண்டுகோள் தெரிவித்துள்ளார்.

வவுணதீவில், பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் உண்மையான குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை என்றும், அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - காந்தி பூங்காவில்,தனது கணவனை விடுதலை செய்யக்கோரி, நான்கு பிள்ளைகளுடன் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அஜந்தன் எனப்படும் சி.ராஜகுமாரனின் மனைவியை, நேற்று முன்தினம் பிற்பகல் சந்தித்துக் கலந்துரையாடிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகரசபை உறுப்பினர் து.மதரன், இராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை தொலைபேசியில் தொடர்புகொண்ட சிறிநேசன் எம்.பி. குறித்த கைது தொடர்பான விபரங்களைத் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட நபர் தொடர்பான தகவல்களைப் பெற்று, சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான முன்னெடுப்புகளை, சிறிநேசன் எம்.பி இதன்போது மேற்கொண்டார். (இ-7)

# காணிப்பிணக்குகள் தொடர்பில் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

## வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபை தவிசாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

காணிப் பிணக்குகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படுவதாக வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபை தவிசாளர் இரட்ணசிங்கம் நவரட்ணம் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,வவுனியா மாவட்ட காணிப் பிணக்குகளுக்கு விரைவாகவும், சுமுகமாகவும் தீர்வு காணும் முகமாக நீதி அமைச்சின் கீழ்மத்தியஸ்தர்சபை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபை கடந்த முதலாம் திகதி முதல் செயற்படத் தொடங்கியுள்ளது.

அதனடிப்படையில் தற்போது காணிப் பிணக்குகள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்க முடியும். பெற்றுக் கொள்ளப்படும் பிணக்குகள் தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, காணிப் பிணக்குகளை நேரடியாக அல்லது தபாலில் இ.நவரட்ணம், தவிசாளர், விசேட காணி மத்தியஸ்தர் சபை, இல. 384/1, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

## ஒரு உறுப்பினருக்கு 10 வீதி விளக்குகள்

(கரணவாய்)

பிரதேசசபை வட்டாரங்களுக்கு ஒரு உறுப்பினருக்கு தலா 10 வீதி விளக்குகள் வீதம் வழங்கப்படும் என பருத்தித்துறை பிரதேசசபை தவிசாளர் அ.சா.அரியகுமார் தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினரான ஞா.தர்ஷன் சபை உறுப்பினர்களுக்கு வீதி விளக்குகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்தார். இதனை ஏற்று சபை உறுப்பினர்களுக்கு 10 வீதி விளக்குகள் வீதம் பகிர்ந்தளிப்பதாக தவிசாளர் தெரிவித்தார். (இ-60)

## கிளிநொச்சியில் அதிக பனிமூட்டம்



(பரந்தன்)

கடந்த சில நாட்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் கால நிலை மாற்றத்தினால் அதிக பனிமூட்டம் காணப்படுகின்றது. காலை ஏழு மணியை கடந்தும் அநேகமான பிரதேசங்கள் பனிமூட்டம் நிறைந்து காணப்படுகின்றன.

அதிகாலையில் கடுமையான பனிப்பொழிவும் காணப்படுகின்றது. இதனால் எதிரே வருகின்ற வாகனங்களை அடையாளம் காண முடியாத நிலையும் காணப்படுவதோடு வீதியில் செல்லும் வாகனங்கள் ஒளியைப் பாய்ச்சியபடி செல்வதையும் அவதானிக்க முடிந்தது. அத்தோடுகாலையில் நடமாடுவதற்கு மக்கள் சிரமப்படுகின்றனர். அத்துடன் அதிகாலையில் கடுமையான குளிர் நிலையும் தொடர்கிறது. (2-312)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 100 | 110 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 110 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 400 | 360 | 450 |
| தக்காளி | 300 | 350 | 320 | – | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 30 | 40 |
| கோவா | 120 | 90 | 120 | 80 | 120 |
| கரட் | 300 | 200 | 200 | 200 | 240 |
| பூசணி | 60 | 50 | 50 | 30 | 60 |
| புடோல் | 100 | 120 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 150 | 120 | 150 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 100 | 75 | 100 |
| பாகற்காய் | 350 | 350 | 240 | 240 | 300 |
| வெண்டிக்காய் | 150 | 120 | 100 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 180 | 250 | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 180 | 240 |
| பீற்றூட் | 180 | 160 | 180 | – | 200 |
| கறிமிளகாய் | 350 | 320 | 240 | 200 | 280 |
| முருங்கைக்காய் | – | – | - | – | – |
| போஞ்சி | 180 | 220 | 200 | 110 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | - | 80 | 80 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 50 | 40 | 80 |
| தேசிக்காய் | 300 | 350 | 300 | 180 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 50 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 200 | 150 | 130 | 200 |
| வெங்காயப்பூ | – | 400 | - | – | – |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 35- | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 80 | 50 | 130 | 80 |

# செய்தித்துளிகள்

## தென்னை மரம் சரிந்து விழுந்ததில் நூலக கூரை பகுதியளவில் சேதம்



(சாவகச்சேரி)

கொடிகாமம்-கச்சாய் பொது நூலகக் கூரை மீது தென்னை மரம் சரிந்து விழுந்ததில் நூலகக் கூரை பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அருகிலுள்ள காணியில் நின்ற தென்னை மரமே கடந்த சனிக்கிழமை மாலை வீசிய காற்றில் சரிந்து விழுந்துள்ளது. (இ-30)

## 5 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்



(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் இ.நாகேந்திரராஜ, பாடசாலை மாணவர்கள் ஐந்து பேருக்கு பருத்தித்துறை பிரதேச சபை மண்டபத்தில் வைத்து தவிசாளர் ஊடாக துவிச்சக்கரவண்டிகளை வழங்கி வைத்தார். (இ-60)

## சர்வமதப் பேரவையின் விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையால் “நாட்டின் தற்கால அரசியல் நிலைமையும் ஜனநாயகத்திற்கு மக்களின் பங்களிப்பும்” எனும் தலைப்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று கொழும்பிலிருந்து வரும் வளவாளர்களால் எதிர்வரும் 22.12.2018 (சனிக்கிழமை) காலை 8.30-12 மணிவரை பாதுகாவலன் மண்டபம் புனித சூசையப்பர் கத்தோலிக்க அச்சகம், இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இடம்பெறவுள்ளது.

இதில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள சமூக ஆர்வலர்கள் யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையின் இணைப்பாளராகிய ஸ்ரீவொகாஞ்சனுடன் (தொலைபேசி இலக்கம் -077 637 2914) தொடர்பு கொண்டு வரவினை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (இ)

## அலோசியஸ்-பலிசேனவின் விளக்கமறியல் நீடிப்பு


(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன அலோசியஸ் மற்றும் அந்நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோரின் விளக்கமறியல் ஜனவரி முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கோட்டை நீதவான் லங்கா ஜெயரத்ன நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக அறிக்கைகளை அன்றைய தினமே நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-7)




# மூன்று மீன்கள்



அந்தக் கிராமத்தில் அழகான குளம் ஒன்று அந்த ஊரில் இருந்தது. அந்தக் குளத்தில் மூன்று மீன்கள் வசித்து வந்தன. மூன்றும் நண்பர்களாக இருந்தன. நண்பர்களாக இருந்தாலும் மூன்று மீன்களும் வெவ்வேறு குணங்களைக் கொண்டிருந்தன.

எதையும் முன்கூட்டியே யோசித்துச் செய்யும் குணம் ஒரு மீனிடத்தில் இருந்தது.

இரண்டாவது மீனோ, "ஏதாவது நடந்தா, அதுக்கு அப்புறம் பார்த்துக்கலாம்...!" என்கிற குணமுடையது.

'நம்மால் எதுவும் செய்ய முடியாது. எது நடக்கிறதோ அதன்படி நடக்கட்டும்...' என்ற குணத்துடன் மூன்றாவது மீனும் வாழ்ந்து வந்தது.

ஒருநாள்- குளக்கரையோரமாய் இரண்டு மீனவர்கள் வந்தார்கள்.

"இந்தக் குளத்தில் ரொம்ப நாளா மூணு பெரிய மீன்கள் இருக்கு. அதைப் பிடிக்கணும்..." என்றான் ஒரு மீனவன்.

"அப்படியா...! நாளைக்கே வலை போட்டுப் பிடிச்சிடுவோம்..." என்றான் இன்னொரு மீனவன்.

இதைக் கரையோரமாய் நின்ற முதல் மீன் கேட்டுவிட்டது.

உடனே, இரு நண்பர்களையும் அழைத்து விடயத்தைச் சொல்லி, "காலையில் நம்மைப் பிடித்து விடுவார்கள். வாருங்கள்... அருகே உள்ள வாய்க்கால் வழியாக இப் போதே வேறு இடத்திற்குச் சென்றுவிடலாம்..." என்று முதல் மீன் சொன்னது.

"நாளைக்குக் காலையில் யாராவது வந்தா பார்த்துக்கலாம். பேசாம வேலையைப் பாரு..." என்றது இரண்டாவது மீன்.

"யாரோ சும்மா பேசிக்கிட்டுப் போயிருக்காங்க. அதுக்குப் போயி பயந்துக்கிட்டு குளத்தை விட்டுப் போறதா...நா வரலே..!" என்றது மூன்றாவது மீன்.

வேறு வழியின்றி, முதல் மீன் மட்டும் வாய்க்கால் வழியாக வேறு இடத்திற்குச் சென்றுவிட்டது.

மறுநாள் அதிகாலையிலேயே மீனவர்கள் சொன்னதுபோல் வந்தார்கள். குளத்தில் வலையை வீசினார்கள்.

திடீரென்று வலையை வீசியதில், தூங்கிக் கொண்டிருந்த இரு மீன்களும் வலையில்சிக்கிக்கொண்டன.

"ஐயோ... நண்பன் சொன்னதைக் கேட்காமல் இப்படி மாட்டிக் கொண்டோமே...!" என்று வருத்தப்பட்டது இரண்டாவது மீன்.

மூன்றாவது மீனோ, "ஏன் வீணாப் புலம்புறே. என்ன பண்றாங்கன்னு பொறுமையாத்தான் பார்ப்போமே...!" என்றது.

இரண்டாவது மீன் வயிறு முட்ட தண்ணீரைக் குடித்தது. வயிறு பெரிதாகி விட்டது. அப்படியே செத்த மீனைப்போல கிடந்தது. மூன்றாவது மீனோ எந்தக் கவலையுமின்றி வலையில் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது.

வலையைக் கரைக்கு இழுத்துவந்த மீனவர்கள், "ஆகா...ஒரு மீன் எப்படியோ தப்பிச்சுடுச்சே...?" என்று வருத்தப்பட்டனர். வலையிலிருந்த மற்ற இரு மீன்களையும் வெளியே எடுத்தனர்.

"இந்த மீனைப் பாரு. வயிறு எவ்வளவு பெருசாயிருக்கு. ஏதோ நோய் வந்து செத்துப் போயிருக்கு... இதை சாப்பிட்ட நமக்கும் நோய் வரும்!" என்றபடி இரண்டாவது மீனைத் தூக்கிக் குளத்தில் வீசினான் ஒருவன்.


குளத்திற்குள் பாய்ந்து சென்று ஒளிந்துகொண்டது இரண்டாவது மீன்.

"அய்யய்யோ...நான் மட்டும்தான் மாட்டிக்கிட்டேனா" என்று மூன்றாவது மீன் புலம்பியது.

## உலகின் சிறந்த 10 தத்துவ ஞானிகள் என்ன சொல்கிறார்கள்?

(நேற்றைய தொடர்ச்சி...)

### அரிஸ்ராட்டில்



மனிதன், இறைவன், அரசியல், மூன்று பிரிவுகளையும் அலசி ஆராய்ந்து தமது தத்துவ தரிசனமாக உலக்கு வங்கியவர் அரிஸ்டாட்டில். இவர் பிளாட்டோவின் மாணவர். மாவீரனாகத் திகழ்ந்த அலெக்சாண்டருக்கு பன்னிரண்டு ஆண்டுகள் நண்பராகவும், ஆசிரியராகவும் இருந்தவர் அரிஸ்டாட்டில்.

"இந்த உலகம் இறைவனால் தோற்றுவிக்கப்படவில்லை. ஆனால் இந்த உலகை இயக்குபவன் இறைவனே!" "மனிதன் தனிமனிதச் சிந்தனை கொள்ளாமல், சமூகச்சிந்தனையோடு வாழ வேண்டும்" என்கிறார் அரிஸ்டாட்டில்.



### கார்ல் மார்க்ஸ்

பொதுவுடைமைக் கொள்கைகளின் மூலவர்களுள் முக்கியமானவர் கார்ல் மார்க்ஸ். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில், வரலாற்றை ஆராய்ந்து சொன்ன இவரது தத்துவங்கள், சமூக பொருளாதார அரசியல் அரங்கில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியது.

"மூலதனம் இறந்த தொழிலாளரை போன்றது. இது உயிருள்ள தொழிலாளரின் உழைப்பை உறிஞ்சும் வாழ்கிறது" என்பது மார்க்ஸ்சின் கருத்து. (தொடரும்...)

## பொன் மொழிகள்

- சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்தது அல்ல. அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தது ஆகும்.
- எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம், என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.
- அரிய சாதனைகள் அனைத்தும் வலிமையினால் செய்யப்பட்டவை அல்ல, விடாமுயற்சியினால் தான்.
- முன்னோக்கிச்செல்லும் போது கனிவாயிரு. ஒருவேளை பின்னோக்கி வரநேரிட்டால் யாராவது உதவுவர்ர்கள்.
- இரகசியத்தை வெளிப்படுத்தியவனுக்கும் துக்கத்தை வெளிப்படுத்தாதவனுக்கும் மனதில் நிம்மதி இருக்காது.
- எல்லோரையும் நம்புவது அபாயகரமானது. ஒருவரையும் நம்பாமல் இருப்பது இன்னும் அபாயகரமானது.
- எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன. ஒன்று காலம், இன்னொன்று மௌனம்.
- எல்லோரும் தம்மை விட்டு விட்டு வேறுயாரையோ சீர்திருத்த முயலுகிறார்கள்.
- ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.

ஒருவன் பட்டுவேட்டி பற்றிய கனவில்
இருந்தபோது அவன் கட்டியிருந்த கோவணமும்
களவாடப்பட்டது. ~ *கவிப்பேரரசு வைரமுத்து*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பிதாமகர் வீஷ்மருக்கு கிடைத்த பேறு என்ன?

பிதாமகர் என்று போற்றப்பட்ட வீஷ்மர் எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்தவர்.

மன்னராக இருந்து ஆட்சி செய்ய வேண்டிய வீஷ்மர் தனது தந்தையின் மறுதாரப் பிள்ளைகளுக்கு ஆட்சி கிடைப்பதற்காக அந்தப் பதவியைத் துறந்தவர்.

தவிர, இல்வாழ்வு புகுந்து மக்கள் பேற்றை பெற்றால் அது ஆட்சி குறித்த சர்ச்சையை ஏற்படுத்தும் என்பதற்காகத் துறவு பூண்டவர்.

இவ்வாறெல்லாம் பெருமைக்குரிய வீஷ்மர் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் வில்வித்தை பயிற்றுவித்த குரு. என்ன செய்வது கௌரவர் சபையில் அவரே படைத் தளபதியாயினார்.

பாண்டவர்களுக்குரிய ஆட்சியை தனதாக்கிக் கொண்ட கௌரவர் சேனைத் தலைவன் துரியோதனன் பாண்டவர்களுக்கு ஐந்து வீடு கொடுப்பதனையும் தவிர்த்தான்.

இதனால் போர் மூண்டது. எங்கும் தர்மத்தையும் அறத்தையும் பாதுகாத்த வீஷ்மர் கௌரவர் சேனை பக்கம் நின்று பாண்டவர்களை எதிர்த்துப் போரிட வேண்டியதாயிற்று.

ஈற்றில் போர்க்களத்தில் பலியாகிய முதல் தளபதி என்ற பெருமையைத் தவிர வேறு எதுவும் அவருக்குக் கிடைக்கவில்லை. வீஷ்மர் என்றொருவர் வாழ்ந்தார் என்பதோடு அவர் வாழ்க்கை முடிந்து போகிறது.

இதைத்தான் விதி என்று சொல்வதா என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. சிலர் என்னதான் திறமையானவராக இருந்தாலும் அவரின் வாழ்க்கை என்பது தோல்வியாகவே முடிந்து போகிறது.

இதற்குப் பலரை உதாரணப்படுத்தலாம். அதில் ஒருவர்தான் வீஷ்மர் என்பதற்காக அவர் பற்றி இங்கு குறிப்புரைத்தோம்.

இவை ஒருபுறமிருக்க, இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழந்துள்ளார்.

இரா.சம்பந்தர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழந்தார் எனும்போது உள்ளூர நெஞ்சம் அடைத்துக் கொள்கிறது.

ஜனாதிபதி மைத்திரியின் பதவிக்கு எந்தப் பங்கமும் இல்லை; ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமர்; பிரதமராக நியமிக்கப்பட்ட மகிந்தவுக்கு ஆறுதல் பரிசாக எதிர்க்கட்சித் தலைவர் பதவி.

ஆக, இருந்த பதவியையும் இழந்தவர் இரா.சம்பந்தர் மட்டுமே. இவ்வாறு பதவியை இழந்தவர் இரா.சம்பந்தர் என்று பார்ப்பதைத் தவிர்த்து, ஒரு தமிழன் என்று பார்க்க வேண்டும்.

ஜனநாயகத்தைக் காப்பாற்றினோம் என்று மார்தட்டினாலும் இழப்பு தமிழர்களுக்கு மட்டுமே.

அதில் முதலாவது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழந்தது. இரண்டாவது அரசியலமைப்பின் தோற்கடிப்பாக இருக்கும்.

என்ன செய்வது துன்பத்தைக் கட்டிச் சுமக்கப் பிறந்த வீஷ்மர் போலத்தான் நம் அரசியல் தலைமையும் அதன்வழி நம் தலைவிதியுமாயிற்று.

# கடந்த கால அரசியல் நெருக்கடிக்கு நிறைவேற்று ஜனாதிபதி முறையே காரணம்

## மலிக் சமரவிக்ரம தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையே கடந்த 52 நாட்கள் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பிரச்சினைகளுக்கு தூண்டுகோலாக அமைந்தது என, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மலிக் சமரவிக்ரம தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறையை இல்லாமல் ஒழிக்கவேண்டுமென கோரி மக்கள் விடுதலை முன்னணிமுன்வைத்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதே நல்லாட்சி அரசாங்கத்தின் முக்கிய செயற்பாடாக இருந்தது. அதனை நாம் செயற்படுத்துவோம். நல்லாட்சியை ஸ்தாபிக்க பாடுபட்ட சோபித தேரரின் எண்ணமும் இதுவே.

கடந்த 52 நாட்கள் இடம்பெற்ற பிரச்சினையின் தூண்டுகோலாக இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையே காணப்பட்டது. இனிமேலும் அதனை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. நிறைவேற்று அதிகார முறை எவ்வாறு அமைந்தது என்பதை கண்டோம்.

ஜனாதிபதி, நீதித்துறை, நாடாளுமன்றத்திற்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். நிறைவேற்று அதிகாரம் நீக்கப்பட வேண்டும். ஒருவரிடம் அதிகாரங்கள் குவிக்கப்படக் கூடாது. நீதித்துறை பலமாக காணப்பட்டதனால் ஜனாதிபதியின் செயற்பாடு தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சர்வதேச, பொருளாதார ரீதியில் பலமிழந்து காணப்படுகின்றோம். அதனை மீள கட்டியெழுப்புவது அவசியம். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையே நாடாளுமன்றத்திற்கு சவாலாக காணப்பட்டது.

19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு, நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது. எனினும், அதனை முற்றாக நீக்கி அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். இதனை நீக்குவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" எனத் தெரிவித்தார். (ம-3)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலேனும் மகிந்த சிறப்பாக செயற்படுவார்

## ரவூப் ஹக்கீம் நம்பிக்கை

எதிர்க்கட்சி தலைவர் பதவியிலேனும் மகிந்த ராஜபக்ஷ சிறப்பாக செயற்படுவார் என எதிர்பார்ப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறையை ஒழிக்கவேண்டுமென கோரி மக்கள் விடுதலை முன்னணி முன்வைத்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "மகிந்த பிரதமர் பதவியை பின்கதவு வழியாக ஏற்றுக்கொண்டார். இந்நிலையில், முன்கதவு வழியாக வந்து எதிர்க்கட்சி தலைவர் பதவியை பெற்றுக் கொணடுள்ளார்.

இவ்வாறே அனைத்து நடவடிக்கைகளும் முன் கதவு வழியாக நேர்மையான முறையில் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது விருப்பம். அதன்படி, எதிர்க்கட்சி தலைவர் பதவியிலேனும் அவர் சிறப்பாக செயற்படுவார் என எதிர்பார்க்கிறோம்.

அரசியலமைப்பில் கொந்தளிப்பை உருவாக்கி, எம்மை அல்லோலகல்லோலப்படுத்தி விட்டு, இன்று அமைதியாக செயற்பட ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இந்நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்க போராடிய சகல குழுக்களுக்கும் நன்றி. அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளும் பேராசையே அண்மைய பிரச்சினைகளுக்கு காரணம்.

2015இல் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து இணங்கி செயற்பட்டோம். மகிந்தவை பதவி நீக்க நாட்டின் சகல கட்சிகளும் இணைந்து 2015இல் செயற்பட்டன. நாம் கொண்டு வந்த ஜனாதிபதி அதனை மறந்து செயற்பட்டார்.

இன்று ஐக்கிய தேசிய கட்சிக்குள்ளேயே இருவேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. அதாவது தேர்தல் முறை குறித்து இருவேறு கருத்துக்கள் காணப்படுகின்றன.

நாடாளுமன்றத்தில் மாத்திரம் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க முடியாது. மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும்" எனத் தெரிவித்தார். (ம-3)

# ஐ.தே.கட்சியுடன் இணையாது தனித்து செயற்பட முடியும்

## சு.கட்சி உறுப்பினர் தயாசிறி

(கொழும்பு)

இனியொருபோதும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட மாட்டோம். அதிகாரம் கையிலிருந்தால் மாத்திரமின்றி அதிகாரம் இல்லாத போதும் சுதந்திர கட்சி உறுப்பினர்களால் செயற்பட முடியும் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க் கிழமை பாராளுமன்ற அமர்வுகள ஆரம்பமாவதற்கு முன்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அவர்,

**கேள்வி:** சிறிலங்கா சுதந்திர கட்சியின் தற்போதைய நிலைப்பாடு மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்ன?

**பதில்:** இரண்டு வருடங்கள் ஒப்பந்தம் கைசாத்திட்டு அதன்மூலம் ஐக்கிய தேசிய கட்சியுடன் தேசிய அரசாங்கமாக செயற்பட்டோம். அத்தோடு ஒப்பந்தம் இன்றி மேலும் ஒரு வருடம் ஆட்சியினை முன்னெடுத்தோம். எனினும் மீண்டும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகளின் பின்னர் சிறிலங்கா சுதந்திரகட்சி அந்த விடயத்தில் உறுதியாகவுள்ளது. இனியொருபோதும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்பட மாட் டோம். எனவேதான் எதிர்க் கட்சியாக செயற்பட தீர்மானித்தோம். (ம-3)

# 18 ஆண்டுகளுக்கு பின் ஈழத்து சிதம்பரத்தில் நாத கான மழை

ஈழத்து சிதம்பரத்தில் 7ஆம திருவிழா விஞ்ஞாபன 63ஆம் வருட குருந்த மர நிழலில் எழுந்தருளும் காட்சி நாளை வியாழக்கிழமை எம்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை இடம்பெறும்.

அத்தருணம் இலங்கை ஈழத்து இளம் நாதஸ்வர தவில் வித்துவான்களுடன் இந்திய தவில் நாதஸ்வர வித்துவான்களும் கலந்து கொண்டு நாத கான மழை பொழிவார்கள்.

எம்பெருமமான் தனது பரிவார மூர்த்திகளுடன் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட குருந்த மர நிழலில் அருள்பாலிப்பு செய்வார்.


அத்துடன் அடியார்கள் கலந்து கொண்டு இஷ்ட சித்திகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (ம)

## எளிமையாய் வாழ...

- சிக்கனத்தைக் கடைப்பிடியுங்கள். வசதியுள்ளவர்களைப் போல வாழவேண்டும் என்பதைவிட வறுமையில் நாம் இல்லை என்பதை உணர்ந்திடுங்கள்.
- ஆடம்பரமான வாழ்க்கையைத் தவிர்த்து அன்பான வாழ்க்கையே சிறந்தது என மகிழ்ந்திடுங்கள். தேவையானவைகளை வாங்கிடுங்கள்.
- அதற்கு முன்பு இது தேவைதானா? என்றும் யோசியுங்கள்.
- எளிமையாய் வாழவேண்டும் என்பதற்காக கஞ்சத்தனமாகவும் இருக்கக்கூடாது.

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### அறிவால் மேம்படுங்கள்



✦ கடவுள் மீது பக்தி செலுத்துங்கள். எதிலும் மூடத்தனமாக இருக்காதீர்கள். அறிவால் வாழ்வில் மேம்படுங்கள்.

✦ பனி, தண்ணீர், நீராவி மூன்றும் ஒரே பொருளின் வெவ்வேறு வடிவங்களே. ஒரே கடவுள் பல வடிவில் இருக்கிறார்.

✦ உலக விஷயங்களில் இருந்து மனதை விடுவிக்காமல் கடவுளை சென்றடைய முடியாது.

✦ முத்தின் வளர்ச்சிக்கு சிப்பி உதவுவது போல சடங்கு, சம்பிரதாயம் ஆன்மிக வளர்ச்சிக்கு உதவுகின்றன.

✦ அடிக்கடி கோபத்திற்கு ஆளாவதால் நல்லது, கெட்டதை பகுத்தறியும் தன்மை இல்லாமல் போகும்.

# மெண்டீஸ்-மத்தியூஸ் அதிரடிச் சதம்
# இலங்கை அணி ஸ்திர நிலையில்







இலங்கை-நியூசிலாந்து அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 259 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

நியூசிலாந்தின் வெல்லிங்டனில் நடந்து வரும் போட்டியின் முதல் இன்னிங்சில் இலங்கை அணி 282 ஓட்டங்களுக்கு ஓல் அவுட் ஆனது.

இதையடுத்து களமிறங்கிய நியூசிலாந்து அணி 578 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இந்நிலையில் இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணி மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 20 ஓட்டங்கள் எடுத்தது.

இதன்பின்னர் நடந்த நான்காம் நாள் ஆட்டத்தில் குசல் மெண்டீசும் அஞ்சலோ மத்தியூஸ்ும் நியூசிலாந்து பந்துவீச்சை அடித்து நொறுக்கினர்.


இருவருமே சதம் அடித்து வியக்க வைத்தார்கள்.

மெண்டீஸ் 116 ஓட்டங்களும் மத்தியூஸ் 117 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இதன் காரணமாக நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி 102 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 259 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இதன் மூலம் இலங்கை அணி 37 ஓட்டங்கள் மட்டுமே பின் தங்கியுள்ளது. (க)

# பங்களாதேஷை துவம்சம் செய்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி




சில்ஹெட்டில் நடந்த பங்களாதேஷிற்கு எதிரான முதல் இருபது-20 போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பங்களாதேஷ்-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான முதல் இருபது-20 போட்டி சில்ஹெட்டில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பற்களாதேஷ் அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

அதன்படி தொடக்க வீரர்களாக தமிம் இக்பால், லிதான் தாஸ் ஆகியோர் களமிறங்கினர். இருவருமே சொற்ப ஓட்டங்களில் அவுட் ஆகி வெளியேறினர்.

அதன் பின்னர் வீரர்களும் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். எனினும், மறுபுறம் அதிரடி காட்டிய தலைவர் ஷகிப் அல் ஹசன் 43 பந்துகளில் 2 சிக்சர்கள், 8 பவுண்டரிகளுடன் 61 ஓட்டங்கள் எடுத்தார்.

இறுதியில் பங்களாதேஷ் அணி 19 ஓவர்களில் 129 ஓட்டங்களுக்கு ஓல்-அவுட் ஆனது. மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் ஷெல்டன் காட்ரெல் 4 விக்கெட்டுகளும் கீமோ பவுல் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணியில், தொடக்க வீரர்கள் அதிரடியில் மிரட்டினர். லீவிஸ் 11 பந்துகளில் 18 ஓட்டங்களில் அவுட் ஆக, ஷாய் ஹோப் பங்களாதேஷின் பந்துவீச்சை துவம்சம் செய்தார்.

சிக்சர்களாக பறக்கவிட்ட அவர், 23 பந்துகளில் 55 ஓட்டங்கள் விளாசி அவுட் ஆனார். இதில் 6 சிக்சர்கள், 3 பவுண்டரிகள் அடங்கும்.

பின்னர் வந்த நிக்கோலஸ் பூரன் 23 ஓட்டங்களும் கீமோ பவுல் 28 ஓட்டங்களும் அதிரடியாக எடுக்க அந்த அணி 10.5 ஓவர்களிலேயே 130 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. (க)

# வெற்றிக்கு உதவாத சதம்; விரக்தியில் விராட் ஹோலி



பெர்த் டெஸ்டில் இந்திய அணி மோசமான தோல்வியைச் சந்தித்துள்ள நிலையில், தலைவர் ஹோலி இது தொடர்பாக பேட்டியளித்துள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக பெர்த்தில் நடந்த 2 ஆவது டெஸ்டில், இந்திய அணி 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. முதல் டெஸ்டில் வெற்றி பெற்ற இந்திய அணி, இந்த டெஸ்டில் மோசமான தோல்வியைச் சந்தித்துள்ளதால் அணித்தலைவர் விராட் ஹோலி கவலையடைந்துள்ளார்.

இந்நிலையில் இதுகுறித்து விராட் ஹோலி கூறுகையில்,

'ஓர் அணியாக ஆங்காங்கே நன்றாக விளையாடினோம். எங்களை விட அவுஸ்திரேலிய வீரர்கள் துடுப்பாட்டத்தில் நன்றாக ஆடினர்.


இந்த பிட்சில் அவர்கள் முதல் இன்னிங்சில் 326 ஓட்டங்களை எடுக்க விட்டது தவறானது.

பந்துவீச்சாளர்கள் ஓர் அணியாக திரண்டு பிரமாதமாக வீசியது மகிழ்ச்சியளிக்கிறது. பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தியதைப் பார்க்கும் போது, எதிர்காலத்தில் இத்தகைய பந்துவீச்சு அணியை நாம் கட்டமைக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

என்னுடைய சதம் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்யவில்லை எனும்போது அதை நான் தரநிலைப்படுத்த விரும்பவில்லை.

எனவே விரும்பத்தந்த முடிவை அளிக்கவில்லை எனும்போது அதைப்பற்றி பேசிப் பயனில்லை என விராட் ஹோலி விரக்தியுடன் தெரிவித்தார். (க)

# பழிக்குப்பழி தீர்த்தது அவுஸ்திரேலியா
## இரண்டாவது டெஸ்டில் இந்தியா படுதோல்வி





பெர்த் டெஸ்டில் இந்தியாவை சுருட்டி 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அவுஸ்திரேலிய அணி அபார வெற்றி பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியா-இந்தியா இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் நடைபெற்றது. முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலியா 326 ஓட்டங்களும் இந்தியா 283 ஓட்டங்களும் எடுத்தன.

அதனைத் தொடர்ந்து, 2 ஆவது இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலிய அணி 243 ஓட்டங்களுக்கு ஓல்-அவுட் ஆனது. அதிகபட்சமாக கவாஜா 72 ஓட்டங்கள் எடுத்தார். இந்தியா தரப்பில் முகமது ஷமி 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் 287 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி, 55 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 4 விக்கெட்டுகளை இழந்தது. தலைவர் ஹோலி 17 ஓட்டங்களிலேயே அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார்.

ரஹானே 30 ஓட்டங்களில் வெளியேற 4 ஆம் நாள் ஆட்டநேர முடிவில், இந்தியா 5 விக்கெட் இழப்புக்கு 112 ஓட்டங்கள் எடுத்திருந்தது. விஹாரி 24 ஓட்டங்களுடனும் ரிஷாப் பண்ட் 9 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்நிலையில் வெற்றிக்கு மேலும் 175 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் நேற்றுக் கடைசி நாள் ஆட்டத்தை இந்தியா தொடங்கியது. விஹாரி 28 ஓட்டங்களில் ஹாரிஸிடம் கட்ச் கொடுத்து வெளியேறினார். அவரை தொடர்ந்து, சிறிது நேரம் தாக்குப்பிடித்த ரிஷாப் பண்ட் 30 ஓட்டங்களில் அவுட் ஆக, ஏனைய விக்கெட்டுகளும் சீட்டுக் கட்டைப் போல சரிந்தது.

இறுதியில் இந்திய அணி 140 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன்மூலம் 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய அணி தரப்பில் ஸ்டார்க், லயன் தலா 3 விக்கெட்டுகளும் கம்மின்ஸ் மற்றும் ஹேசல்வுட் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். (க)




அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## கடத்திய நால்வர்...

இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு கோவில் முள்ளியானை சேர்ந்த சி.நமசிவாயம் (வயது-60) என்ற முதியவர் ஒருவரை கார் மற்றும் தளபாடங்கள் விற்பனை செய்யும் வாகனம் ஆகியவற்றில் வந்த 7 பேர் கொண்ட கும்பல் கடத்திச் சென்றுள்ளது.

இதனை அவதானித்த அந்தப் பகுதி இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் கடத்தல்காரர்களை சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் துரத்தி சென்று இயக்கச்சி பகுதியில் வைத்து மடக்கி பிடித்தனர். அவர்களில் மூவர் தப்பிச் செல்ல நால்வர் மட்டும் சிக்கிக்கொண்டனர். அவர்கள் நால்வரும் இளைஞர்களால் நையப்புடைக்கப்பட்டனர்.

இதன்போது சம்பவ இடத்திற்கு வந்த பளைப் பொலிஸார், நால்வரையும் கைது செய்தனர். அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது கடத்தப்பட்ட முதியவர் தமக்கு பல லட்சம் ரூபாய் பணம் கொடுக்க வேண்டும் எனவும், அதனாலேயே தாம் கடத்தியதாகும் கடத்தல்காரர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை, கட்த்தல்காரர்கள் தொடர்பில் விசாரணை நடத்தியபோது அதில் இருவர் இயக்கச்சி இராணுவ முகாமை சேர்ந்த இராணுவ சிப்பாய்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

இந்த கடத்தல் சம்பவத்தில் கைதாகியுள்ள இராணுவ சிப்பாய்கள் இருவரையும் கொழும்பில் இருந்துவந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் தன்னுடன் அழைத்துச் சென்று குறித்த முதியரைக் கடத்தியுள்ளார். (ம)

## அரசியல் தீர்வொ...

பாராளுமன்றில் நேற்று ஆற்றிய விசேட உரையின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், ஒக்டோபர் 26 ஆம் திகதி இடம்பெற்ற அரசமைப்புக்கு முரணான செயற்பாடுகளை தோற்கடிக்க ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றிகள்.

இதற்காக பிரேரணைகளை சமர்ப்பித்த மற்றும் நிறைவேற்றிய தரப்பினருக்கும் எமது நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்.

மாவை சேனாதிராசா, வடக்கின் பிரச்சினைகள் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார். இதனை நாம் தீர்க்க வேண்டும்.

வடக்கின் பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காண்பதும் எமது அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக இருக்கிறது. புதிய அரசமைப்பையும் கொண்டுவருவோம். இதன் ஊடாக ஒருமித்த நாட்டில் அனைத்து இன மக்களும் ஒன்றாக வாழ்வதற்கு வழியமைப்போம்.

அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளும் அரசியல் தீர்வை நாம் வழங்குவோம். புதிய அரசமைப்பின் ஊடாக மாகாண சபைகளையும் சக்திமிக்கதாக மாற்றியமைப்போம்.

அத்தோடு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையையும் இல்லாதொழிக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது.

இந்த நிலைப்பாடுகளில் இருந்து நாம் ஒருபோதும் பின்வாங்கமாட்டோம் என்பதை இவ்வேளையில் கூறிக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிக்க புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும்

## பாராளுமன்றில் சுமந்திரன் எம்.பி வலியுறுத்து

நிறைவேற்று அதிகாரத்தை கட்டுப்படுத்த அரசியலமைப்பின் 19ஆம் திருத்தச் சட்டம் சிறந்த தீர்வு அல்ல. 19ஆம் திருத்தம் மூலமாக நிறைவேற்று அதிகாரம் ஒரு சிறிய அளவே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே புதிய அரசியலமைப்பின் மூலமாக முழுமையாக நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிக்க வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பினை உருவாக்க இப்போது நல்ல சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. அதனை நழுவவிடக்கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே தமிழ்த் தேசியக் கூட்டமைபின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதனைக் குறிப்பிட்டார்.

அரசியல்வாதிகளின் இனவாத செயற்பாடுகளை மக்கள் உதறித் தள்ளியுள்ளனர். எமது நாட்டினை மீண்டும் நாசமாக்க எந்த மக்களுக்கும் விருப்பம் இல்லை. இந்த நாட்டில் எவரும் இரண்டாம் தரப்பு மக்கள் அல்ல. அனைவரும் சமமானவர்கள்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டால் அது தேசிய பிரச்சினைக்கு தீர்வாக அமையும். பெரும்பான்மை மக்கள் உள்ளிட்ட எமது மக்கள் அனைவரும் இனவாதத்தை எதிர்த்துவிட்டனர். சகல மக்களும் சமமானவர்கள் என்பதை எமது மக்கள் நிரூபித்துள்ளனர் என அவர் தெரிவித்தார். (ம-3)

# பாராளுமன்ற அவைத் தலைவராக லக்ஷ்மன் கிரியெல்ல நியமனம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் அவைத் தலைவராக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை கூடியபோது சபாநாயகர் இதனை அறிவித்தார்.

அத்தோடு, ஆளும் கட்சியின் பிரதான கொறடாவாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவாக மகிந்த அமரவீர நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

# பரந்தன் விபத்தில் படுகாயமடைந்த மாணவி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு வீதி பரந்தனில் கடந்த 11 ஆம் திகதி அம்புலன்ஸ் வண்டி மோதி விபத்திற்குள்ளானதில் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பாடசாலை மாணவி சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் கிளி/முருகானந்தா கல்லூரியில் தரம் 4 ல் கல்வி பயிலும் ரவீந்திர குமார் பரணிகா (வயது-9)என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரணவிசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-3-9)

# ஐ.தே.கட்சியில் இணைந்த எவருக்கும் அமைச்சுப் பதவி வழங்கக்கூடாது

## சுதந்திரக்கட்சி கூட்டத்தில் தீர்மானம்

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட எவருக்கும் அமைச்சு பதவி வழங்கக் கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் அதிரடி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுந்தந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் அந்த கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று இரவு இடம்பெற்றது.


இதன்போது சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துகொண்ட எவருக்கும் அமைச்சு பதவி வழங்க கூடாது என அதிரடி தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மத்திய செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்தும் அதிகாரம் கட்சி தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த விஜித் விஜயமுனி சொய்சா உள்ளிட்ட மூவர் நேற்று அரசாங்க தரப்பினருக்கு ஆதரவு தெரிவித்து ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கொள்கையின் அடிப்படையிலேயே செயற்படுகின்றோம்

## சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

பெரும்பான்மைக்கு அமைய செயற்படுவதே இந்நாட்டின் சம்பிரதாயம் என சபாநாயகர் கூறியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

புதிய எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் ஆனதில் தமக்கு பிரச்சினை இல்லை என குறிப்பிட்ட இரா. சம்பந்தன், அவர் தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் இருப்பாரா என்பதே பிரச்சினை எனவும் கூறினார்.

கொள்கையின் அடிப்படையிலேயே தாம் செயற்படுவதாக சுட்டிக்காட்டியதுடன், நாட்டில் பெரும்பான்மையை நிலைநிறுத்துகின்ற தீர்மானமாக இதனைக் கருதுவதாகவும் இரா.சம்பந்தன் குறிப்பிட்டார். (ம-3)

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# படையினர் வசமிருந்த 52 ஏக்கர் காணி விடுப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர் வசமிருந்த 52.14 ஏக்கர் அரச மற்றும் தனியார் காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டு அதற்கான ஆவணங்களை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் இலங்கை பாதுகாப்புப் படைகளின் முல்லைத்தீவு படைத்தளபதி மேஜர் ஜெனரல் துஸ்யந்த ராஜகுரு கையளித்துள்ளார்

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த அரச மற்றும் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன.

அந்த அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினரின் பயன்பாட்டில் இருந்த ஒரு தொகுதி காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு விடுவிக்கப்படுகின்ற காணிகளுக்கான ஆவணங்களை மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வும் நத்தார் தின நிகழ்வும் நேற்று மாலை 7 மணிக்கு முல்லைத்தீவு புனித இராயப்பர் ஆலயத்தில் நடைபெற்றுள்ளது.

விசேட ஆராதனைகளுடன் ஆரம்பமான நத்தார் தின நிகழ்ச்சியினை அடுத்து காணிகள் கையளிக்கப்பட்டன. விடுவிக்கப்பட்ட காணிகளுக்கான ஆவணங்களை மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் மாவட்ட வனவள அதிகாரி ஆகியோரிடம் இலங்கை பாதுகாப்புப் படைகளின் முல்லைத்தீவு படைத்தளபதி மேஜர் ஜெனரல் துஸ்யந்த ராஜகுரு கையளித்துள்ளார். (ம-315)

மஹஜன சம்பத
திகதி 2018/12/18
சீட்டிழுப்பு இலக்கம் 3814
ஆங்கில எழுத்து B வெல்லப்பட்ட இலக்கங்கள் 2 6 8 0 3 1
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.12.18
சீட்டிழுப்பு இலக்கம் 1977
ஆங்கில எழுத்து H வெல்லப்பட்ட இலக்கங்கள் 13 50 56 57
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 2018/12/18
சீட்டிழுப்பு இலக்கம் 145
ஆங்கில எழுத்து M வெல்லப்பட்ட இலக்கங்கள் 17 22 39 54
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2018/12/18
சீட்டிழுப்பு இலக்கம் 487
லக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 12 25 29 39 21
தேசிய லொத்தர் சபை

## புதிய அமைச்சர...

சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அரசியல் அமைப்பின் 19ஆம் திருத்தத்திற்கு அமைய பாதுகாப்பு அமைச்சு, சுற்றாடல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சு என்பவற்றையே ஜனாதிபதி வைத்திருக்க முடியும் எனவும்,

தற்போது ஜனா திபதியிடம் உள்ள சட்டம் மற்றும் ஒழு ங்குகள் அமைச்சு க்கு ஐக்கிய தேசிய முன்னணியின் இரு உறுப்பினர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும், அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவை 30 பேராக மட்டுப்படுத்த ப்பட்டுள்ள நிலையில், அமைச்சரவை அல்லாத அமைச்சு பதவிகள் சிலவற்றை வழங்கவும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், அமைச்சரவையின் பெயர்ப் பட்டியலை ஜனாதிபதி அனுமதித்த பின்னரே அமைச்சர்கள் சத்திய பிரமாணம் செய்து கொள்வர் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## கல்வித் தகைமை...

இது குறித்து நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அமைச்சரவை உறுப்பினர்களின் கல்வித் தகைமைகளை கவனத்தில் கொள்ளுதல் மற்றும் அதனடிப்படையில் அமைச்சு பதவிகளை வழங்குதல். அவற்றை குறித்த அமைச்சரின் கல்வி தகைமைக்ளுடன் நாட்டிற்கு அறிவித்தல் போன்ற விடயங்களை கட்டாயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் தொடர்பில் நாட்டு மக்களிடையே காணப்படும் வெறுப்பு தன்மையை இல்லாதொழித்து புதிய அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் பப்ரல் அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது. (ம)

## எதிர்...

எனினும், சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி பொதுஜன பெரமுனவில் இணைந்தவருக்கும் அரசாங்கத்தில் பதவிகளை பெற்றுக் கொண்ட தரப்பிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்க முடியாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன வாதிட்டு வருகின்றன.

அத்தோடு, பாராளுமன்ற தெரிவுக் குழுவை அமைத்து இதற்கு தீர்வுகாண வேண்டுமென்றும் அறிவிக் கப்பட்டுள்ளது. (ம-3)

## ஒன்றி...

மேலும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஒரு வலுவான முன்னணியாக செயற்பட வேண்டும் என குறிப்பிட்ட ஜனாதிபதி, முன்னணி ஒன்றை அமைப்பது இலகுவான விடயமல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட அரசியல் கூட்டமைப்புக்கள் தொடர்பிலும் ஜனாதிபதி இதன்போது விரிவாக தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போது அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட சுதந்திர கட்சி உறுப்பினர்களான லக்ஷ்மன் செனவிரத்ன, இந்திக பண்டார நாயக்க ஆகியோரும் குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


உடனடி வேலைவாய்ப்பு

உலகளாவிய ரீதியில் விஸ்தரித்து பல கிளைகளை இலங்கையிலும் வடக்கு முழுவதும் ஸ்தாபித்துக் கொண்டிருக்கும் எமது நிறுவனத்துக்கு 2019 ஆம் ஆண்டில் துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞர் யுவதிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன.

- அடிப்படை தகைமை O/L, A/L
- வயதெல்லை 18 - 35
- தங்குமிட உணவு வசதிகள் உண்டு
- அனுபவம் அவசியமற்றது

(6740) தொடர்பு: 0775528534, 0764598925

FLC FRENCH LANGUAGE CENTRE



பிரெஞ்சு

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456/0762 669 614

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

வேலைவாய்ப்பு

இலங்கையின் பிரதான நிதி நிறுவனத்தின் நெல்லியடி கிளையில் உடனடி வேலைவாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
0764089435, 0778039320
(வடமராட்சி பகுதியை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது)

DMI Jaffna — A/L 2K21 பொருளியல் S.S. சிறி — ஜனவரி 5 காலை 09

கல்வி – தொழில் வழிகாட்டி சேவையில் 10வது ஆண்டில் காலடி பதிப்பதை முன்னிட்டு

Emerald Isle — License No.2268
SIKARAM ACADEMY — Sri Lankan Entrepreneur of the Year 2017

நடாத்தும்
வெளிநாட்டு வேலைவாய்ப்பு
கண்காட்சியும் அனுமதிகளும்

மத்திய கிழக்கு, ஐரோப்பா மற்றும் மேற்குநாடுகள்
ஹொட்டேல், கட்டடவாக்கம், தொழில்நுட்பம், சுகாதாரம், பொறியியல், வர்த்தகம், மருத்துவம், போக்குவரத்து உட்பட சகல துறைகளிலும்

யாழ்ப்பாணம் — டிசம்பர் 20, 21, 22 சிகரம் விரிவுரை மண்டபம்
கிளிநொச்சி — டிசம்பர் 28 மாவட்ட செயலக மாநாட்டு மண்டபம்

தினமும் காலை 9 மணி முதல் 4 மணி வரை
பிரவேசம் இலவசம்!
மேலதிக விபரங்கள் உங்கள் பகுதி கிராமசேவையாளர்களிடம்

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
0777 324 004, 077 00 38 215, 021 221 9 221 (C-1753)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS
0768226240
மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-4653)

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை (C-4742)

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை



- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062 077 6655413 (C-4757)

Techno World
(வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி)

A/L தொழில்நுட்ப பிரிவு - 2021
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
22.12.2018 சனிக்கிழமை காலை 9.00 மணி
நவீன ஆய்வுகூட வசதிகளுடன்...

தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (SFT)
சக்தி (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
ராகவன் (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)
முருகநிரோஜன் (யா/வயாவிளான் ம.கல்லூரி)
மதுசூதன் (யாழ் பல்கலைக்கழகம்)

பொறியியல் தொழில்நுட்பவியல் (E-TEC)
அருண்குமார் (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)
ஜெகநாதன் (விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி)
சிவஜன் (தொழில்நுட்பக் கல்லூரி)

உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (Bio - Tec)
திருக்குமரன் (நெல்லியடி மகா வித்தியாலயம்)
ஜெயந்தன்
பொன் சிவகுமார்

ICT
லவன் (உதவி விரிவுரையாளர், கணனி விஞ்ஞானம்)
உமாகாந்தன் BIT (யா/மத்தியகல்லூரி)

புவியியல் ஜெனகன் (J.H.C)
சித்திரம் ஜெயந்தன் (J.H.C)
வணிகக்கல்வி தீசன்
விவசாய விஞ்ஞானம் சாரங்கன்
ஊடகக்கல்வி கோணேஸ்
கணக்கீடு சுகிர்தன்
கணிதம் தயாளன்
பொருளியல் பிரதீபன்

077 017 5346 கிளைகள் : புத்தூர், யாழ்ப்பாணம். (C-4761)

உடனடி வேலைவாய்ப்பு

சுத்திகரிப்பாளர்

சூழலை சுத்தமாக்கும் சேவையை வழங்கும் எமது நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டத்தில் நிலவும் சுத்திகரிப்பாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆண்/ பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

ஆகக் குறைந்த தகைமை 8 ஆம் தரம் கல்வி கற்றிருத்தல் மற்றும் மேற்குறிப்பிட்ட துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தகைமையுள்ளவர்கள் கீழ்குறிப்பிட்ட முகவரியில் அமைந்திருக்கும் எமது அலுவலகத்திற்கு உங்கள் விபரங்களை 27.12. 2018 ஆம் திகதிக்கு முன்னர் நேரில் அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

கிளீன்வெல் பிறைவேட் லிமிட்டெட்,
இல.154, 1-ம், குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 021 222 4128 (C-4756)

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தொழினுட்பப் பிரிவு ஆரம்பித்ததிலிருந்து தொடர்ச்சியாக தேசிய முதல் நிலைச் சாதனையாளர்களை உருவாக்கி வருகின்ற அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்

தொழில் நுட்பப் பிரிவு
A/L 2021 ஆரம்பம்

- பொறியியல் தொழினுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
- தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம், ஊடகக்கல்வி

20.12.2018 வியாழக்கிழமை காலை 8.30
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புக்கு :077 248 7774 (C-4730)
தரம்,தனித்துவம், உயர்ந்தபெறுபேறு இதுவே எமது இலக்கு


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.